www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමී

Puthiya Poomi

சுற்று 14 | ஜனவரி 2007 | பக்கம்12 | விலை 15/ | சுழற்சி 99

# இந்தியாவின் இரட்டைவேடம்

## இனப்பிரச்சனையை தீர்க்குமா?







இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா மீண்டும் களம் இறங்கக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. அதனை அண்மைய நிகழ்வுப் போக்குகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இதன் மூலம் இந்திய ஆளும் வர்க்க கொள்கை வகுப்பாளர்கள் இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் புதிய அணுகுமுறை ஒன்றை கடைப்பிடிக்கத் தயாராகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்திய ஆளும் வர்க்கமானது தமது பிராந்திய மேலாதிக்க மூலோபாயத்திற்கு அமைய இலங்கை இனப்பிரச்சினையைப் பயன்படுத்தி வந்துள்ளமை இரகசியமான ஒன்றல்ல. 1983ல் இருந்து நேரடியாகவே தலையிட்டு வந்துள்ளதுடன் 1987 -91 வரையான காலப்பகுதியில் தனது ராணுவத்தை அனுப்பி நடந்து கொண்ட விதம் யாவரும் அறிந்த ஒன்றேயாகும். தமது கைகளைச் சுட்டுக் கொண்ட நிலையில் இந்திய ராணுவம் வெளியேறிய பின் இந்தியா இலங்கை விவகாரத்தில் தூர இருந்து அவதானிக்கும் நிலையிலேயே இருந்து வந்தது.

ஆனால் இங்கு எடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கைகள் பற்றியும் இலங்கையில் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இந்தியா சென்று எசமானர்களுக்கு அறிக்கை செய்வது போன்றே நடந்து வந்துள்ளன. அவ்வாறே பேச்சுவார்த்தை அனுசரணையாளரான நோர்வேயும் இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளும் இந்தியாவிற்கு அவ்வப்போது அறிக்கை செய்யத் தவறவில்லை.

2002ல் ரணில் விக்கிரமசிங்கா நோர்வேயின் அனுசரணையுடன் புலிகள் இயக்கத்துடன் புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு வந்த போது இந்தியா உள்ளூர உடன்பாடு இல்லாத நிலையிலும் விட்டுப் பிடிக்கும் நிலைப்பாட்டையே எடுத்துக் கொண்டது. அமெரிக்க மேற்குலக ஆதிக்கம் இலங்கையில் புகுந்து விடயங்களைக் கையாள்வதை இந்தியா எவ்வகையிலும் விரும்பவில்லை. காரணம் தனது பிராந்திய மேலாதிக்க நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதற்கேயாகும். அதனாலேயே நோர்வேயின் அனுசரனையிலான அரசாங்கம்- புலிகள் இயக்க பேச்சுவார்த்தை முன் செல்வதை இந்தியா விரும்பவில்லை. வெளிப்படையாகக் கருத்துக் கூறும் போது பேச்சுவார்த்தைக்கு அரசியல் தீர்வுக்கும் ஆதரவு என்று கூறி வந்த

தொடர்ச்சி 12ம் பக்க →

# வடக்கு கிழக்கு பிரிப்பு

## தமிழ் முஸ்லீம் மக்களுக்கு பேரடி!

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரித்து நிர்வாக அமைப்புகளாக்குவதில் மும்மரம் காட்டி வருகிறது. வடக்கு கிழக்கு இணைப்பை ரத்து செய்யக் கோரி ஜே.வி.பி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு ஏற்கனவே இருந்து வரும் இணைப்பை சட்ட விரோதமானது எனக் கூறியது. அதனைத் தொடர்ந்து ஜே.வி.பி ஹெல உறுமய பேரினவாத வெறியர்கள் மாகாணங்களைப் பிரிக்குமாறு ஜனாதிபதியை வற்புறுத்தி வந்தனர். அதன் அடிப்படையில் சகல பேரினவாதிகளின் விருப்பங்களுக்கு அமைய இன அழிப்பு உள்நோக்கங்களுடன் வடக்கு கிழக்கு மூன்று நிர்வாகங்களின் கீழ் பிரித்து விடப்படுகின்றது.

வடக்கு கிழக்கு தனித்தனி நிர்வாக கட்டமைப்புகளின் கீழும் கிழக்கின் ஒரு பகுதியான திருகோணமலைப் பகுதி தனி நிர்வாகத்தின் கீழும் கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆளுனர்கள் நியமிப்புடன் மாகாண சபைகளின் கீழான நிர்வாகிகளும் தனித்தனியாக நியமிக்கப்பட்டு வருகின்றனர். கிழக்கின் மாகாணசபை தலைமையகம் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை நகருக்கும் வடக்கிற்கான தலைமையகம் வவுனியாவிற்கும் அமைக்கப்பட உள்ளது. திருகோணமலை நகரம் மத்திய அரசின் தனி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு கிழக்கு ஒரே மாகாண சபையாகவும் நிர்வாக அலகாகவும் மாற்றப்பட்டு இன்று வரை யுத்தத்தின் மத்தியிலும் நிர்வாகம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஆனால் மகிந்த சிந்தனையின் கீழ் மேற்படி இணைப்பு உடைக்கப்பட்டு பேரினவாத நச்சுத்தனமான இன ஒடுக்கல் நடவடிக்கைகளும் பௌத்த சிங்கள மேலாதிக்க செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் வடக்கு கிழக்கை பாரம்பரிய பிரதேசங்களாகக் கொண்ட தமிழ் முஸ்லீம் மக்கள் நிலத்தாலும் பொருளாதாரத்தாலும் குறுகிய கருத்துக்களாலும் துண்டாடப்படுகின்றனர். ஒரே நேரத்தில் பேரினவாதிகள் பல்வேறு உள்ளார்ந்த இன ஒடுக்குமுறை இன அழிப்புத் திட்டங்களை நிறைவேற்ற முனைப்புப் பெற்று நிற்கின்றனர். தாயகக் கோட்பாடு, சுயநிர்ணய உரிமை இணைந்த பிரதேசத்தில்

தொடர்ச்சி 12ம் பக்கம் →

# காட்டிக்கொடுக்கப்பட்ட தொழிலாளர் போராட்டம்



நியாயமான சம்பள உயர்வைக் கோரிய தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களை காட்டிக் கொடுத்துவிட்டு இ.தொ.கா, இ.தே.தோ.தொ.சங்கம் பெருந்தோட்டத்தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டி என்பன இன்னுமொரு கூட்டு ஒப்பந்தமான அடிமைச் சாசனத்தில் கைச்சாத்திட்டுள்ளன. அதன்படி தோட்டத்தொழிலாளர்களின் அடிப்படை நாள் சம்பளம் 170 ரூபாவாக இருப்பதுடன் உயர்ந்தபட்ச நாள் சம்பளம் ரூபா 260 ஆக இருக்கும். இக் கூட்டு ஒப்பந்தம் வழமை போல் இன்னும் இரண்டு வருடங்களுக்கு அமுலில் இருக்கும் என்பதால் இரண்டு வருடங்களுக்கு வாழ்க்கைச் செலவு எவ்வளவுதான் அதிகரித்தாலும் இதே சம்பளத்துடனேயே ஜீவிக்க வேண்டியது தொழிலாளர்களின் தலைவிதியாக்கப்பட்டுள்ளது. இத் தலைவிதியை தோட்டக்கம்பெனிகளின் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனமும் அரசாங்கமும் அவற்றுக்கு துணைபோகும் இ.தொ.கா, இ.தே.தோ தொ.சங்கம், பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி என்பனவும் விதித்துள்ளன. தொழிலாளர்கள் ரூ 300/= அடிப்படை சம்ளத்திற்காக போராடியபோதும் ரூ 170/= விற்கு கூட்டு ஒப்பந்தத்தை செய்து கொண்டதன் மூலம் சம்பந்தப்பட்ட அந்த தொழிற்சங்கங்கள் வரலாற்றில் மீண்டும் ஒரு பாரிய காட்டிக் கொடுப்பை செய்துள்ளன. நவம்பர் 20 ஆம் திகதியிலிருந்து மெதுவாக வேலை செய்யும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க முடியவில்லை என்று இ.தொ.கா நவம்பர் மாதக்கடையில் அறிவித்தப் பிறகு தொழிலாளர்கள் அடுத்தக்கட்ட போராட்டமான வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தயாராக இருந்தனர். அவ்வேளை ம.ம.மு வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது. வேலை நிறுத்தப் போராட்டத்தை தாமே தொடக்கி வைத்ததாக காட்டிக்கொண்ட ம.ம.மு ஒருவார வேலை நிறுத்தப் போராட்டத்துடன் தொழிலமைச்சருடனும் பிரதமருடனும் பேச்சுவார்தை நடாத்தியது. அதில் தாம் முன் வைத்த ரூபா 250 அடிப்படை சம்பளக் கோரிக்கை

தொடர்ச்சி 9ம் பக்கம் →

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# நாலும் நடக்கும் உலக'லே

நற்குணன்

## டாக்டர் கலைஞர் முதல்வர்.......

டாக்டர் கலைஞர் முதல்வர் கருணாநிதிக்கு இலங்கைத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க நேரம் கிடைத்தது பற்றி நமது தமிழ் ஏடுகள் மிகவும் குளிர்ந்து போயுள்ளன. கருணாநிதியின் நீண்ட உறக்கம் கலைந்ததன் விளைவாக அவர் ஈழத் தமிழரின் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு இந்தியப் பிரதமரை வற்புறுத்தப் போவதாகச் சொன்னாரா தெரியவில்லை. தமிழ கத்தில் நடக்கிற ஈழத்தமிழர் ஆதரவுப் பேரணிகளால் அவரது தூக்கம் கலைந்தாலும் நித்திரைக் கலக்கத்தில் தனக்கு இங்கே நடக்கிற எல்லாமே தெரியும் என்றும் சொல்லி வைத்திருக்கிறார். அப்படித் தெரியும் என்றால் ஏன் சில மாதங்கள் முன்பு அதே தமிழ்த் தலைவர்களைச் சந்திக்க மறுத்தாரென்று தெரியவில்லை.

இந்தியா இத்தகைய கொடுமைகட்கு நடுவிலும் குண்டு வீசும் விமானங்களை இயக்குவதற்கு இலங்கை விமானிகட்குப் பயிற்சி அளிக்கிறது. இலங்கைக்கு இந்தியா ஆயுதங்களை விற்காததால் இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்கட்கு ஒன்றும் குடிமுழுகிப் போகாது என்பதையும் நாம் மறக்கலாகாது.

கருணாநிதி படு சாரசரியான ஒரு படைப்பாளி என்றாலும் கெட்டித்தனமான வியாபாரி. ஜெயலலிதாவைவிடச் சிறப்பான அரசியல் நடிகர். சீடப்பிள்ளைகளை தெரியாமலா பெரியார் இவர்களை "கூத்தாடிப் பசங்க" என்றார்? அவர்தான் நடிக்கிறாரென்றால் நமது ஊடகங்களுக்கு என்ன நடந்தது? தமிழக மகா நடிகர்களின் திரைப்பட வீர சாகசங்களுக்கு விசிலடிப்பது போல அல்லவா பத்திரிகைகளில் எழுதித் தள்ளுகிறார்கள்.

## கடத்தல் மன்னர்கள்

கிழக்குப் பல்கலைக்கழகத் துணை வேந்தரின் கடத்தல் கொழும்பு மாநகரின் பாதுகாப்புக் கெடுபிடிகள் மிகுதியாகவுள்ள பகுதியிலேயே நடந்துள்ளது. பல்கலைக்கழ மானிய ஆணையத்தின் வேண்டுதலின் பேரிலேயே பதவியில் தொடர்ந்திருந்த துணை வேந்தரின் கடத்தலுக்கு அவர் பதவி விலகத்தவறியது முக்கியமான காரணமாயிருந்திருக்கக் கூடிய சூழ்நிலையில் பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் தரப்பில் அதுபற்றிய எதுவிதமான குற்ற உணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை. எனினும். சி.ஐ.டி. துப்பறியும் சிங்கங்கள் புலிகளுக்குக்கு கடத்தலுடன் தொடர்பு இருக்கக் கூடுமோ என்று விசாரிப்பதாக இலங்கை யின் படுமோசமான ஆங்கில நாளேடு கொட்டை எழுத்தில் செய்தித் தலைப்பு வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகளால் பட்டப்பகலில் இக் கடத்தலை நடத்த முடிந்ததென்றால் கொழும்பில் உள்ள பாதுகாப்பு முற்றிலும் பயனற்றது என்று தானே கருத்து!

கடத்தல் இன்று ஒரு அரசியல் விளையாட்டாகி விட்டது. அதனால் பெரிதும் துன்புறுகிறவர்கள் அப்பாவி மக்கள் தான். அவர்களைப் பற்றி அரசியல் தலைமைகட்கும் அக்கறையில்லை. அரசாங்கத்திற்கும் அக்கறையில்லை என்றுதான் கூற வேண்டும்.

## வினோதமான விளக்கங்கள்

வாகரைப் பகுதியிலிருந்து மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வராமல் விடுதலைப் புலிகள் மறிக்கிறார்கள் என்று கொஞ்சக் காலம் முன்பு குற்றஞ்சாட்டப்பட்டது. இப்போது குண்டு வீச்சும் உணவுப் பற்றாக்குறையும் குடியிருப்பு சுகாதாரப் பிரச்சனைகளும் காரணமாக மக்கள் ஆயிரக் கணக்கில் காட்டுவழியாக வந்து சேர்ந்துள்ளபோது விடுதலைப் புலிகளின் கொடுமை தாங்க முடியாமல் வந்துள்ளனர் என்று அரசாங்க ஏடுகளும் பிற பேரினவாத ஏடுகளும் எழுதி வருகின்றன. நாளை இதே மக்கள் தமது வீடுகட்குப் போக வேண்டும் என்று பிடிவாதமாக நின்றால் என்ன சொல்லுவார்கள்? அரசாங்கத்தின் அன்பான கவனிப்பு அலுத்துப்போய் திரும்பி விட்டார்கள் என்று சொல்லுவார்களா?

## தவமாயத் தவமிருந்து

கடைசியாக தமிழ்த் தலைவர்மாருக்கு பிரதமர் மன்மோகன் சிங் த்ரிசனம் கிடைத்துள்ளது. சந்திப்பின் பின்பு மன்மோகன் சிங் இலங்கைத் தமிழர் சார்பாகக் குறுக்கிடுவதாக வரம் வாங்கியுள்ளதாகத் தலைவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதை உடனடியாக அடுத்து வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்தியா இலங்கையில் நேரடியாகக் குறுக்கிடாது என்று பத்திகையாளர்கட்கு அறிக்கை விடுத்திருக்கிறார். இந்திய இலங்கை உடன்படிக்கையின் முக்கிய அம்சமான வடக்கு கிழக்கு இணைப்பை வடக்கு- கிழக்கின் ஆளுனர் கலைப்ப தற்கான நடவடிக்கைகளை எடுத்து விட்டார்.

இந்தியா அமெரிக்காவை மீறி இனி என்ன செய்யும் என்பது ஒரு பெரிய கேள்வி. ஆனால் இந்தியாவின் கையில் பகடைக் காய்களாக உருளிவதற்கு நமது தமிழ்த் தலைவர்கள் ஆயத்தம் என்பதை ஐயத்துக்கு இடமின்றித் தெரிவித்து விட்டனர்.

# மலையக ஆசிரிய நியமனங்களில் குளறுபடி

மலையக ஆசிரியர் நியமனங்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் நியமனம் நீண்டகாலம் இழுத்தடிக்கப்பட்டது. இ.தொ.காவில் உள்வாங்கப்பட்டு அதன் உபதலைவராக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான பைசல் முஸ்தாபாவின் ஆதரவாளர்களினாலேயே அவ்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. நியமனங்களில் 600 நியமனங்களை முஸ்லீம்களுக்கு கொடுக்க சம்மதம் தெரிவித்ததையடுத்து அவ் வழக்குகள் சமரசமாகத் தீர்க்கப்பட்டன.

அந்த 600 நியமனங்கள் நீங்கலாக ஏறக்குறைய 3 ஆயிரம் பேருக்கான நியமனங்கள் மலையகத்தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாமலே நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. அந்நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் அநேகர் க.பொ.த உயர்தரம் சித்தியடையாதவர்களாக இருப்பதனால் அந்நேர்முகப்பரீடசைக்கு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. க. பொ. த உயர்தரம் சித்தியடையாதவர்கள் மட்டுமன்றி க.பொ.த சாதாரண தரத்தில் கணித பாடம் சித்தியடையாதவர்களும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதற்குகாரணம் சம்பந்தப்பட்ட நியமனத்திற்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிகள் மேற்கொண்ட தெரிவு முறையில் குழப்பம் இருந்ததே ஆகும் என்று கூறப்படுகிறது. அந்நியமனங்களுக்கு க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன், போட்டிப்பரீட்சையிலும் தேறி இருக்க வேண்டும். விபரங்களை வெளியிடாமலே நேர்முகப்பரீட்சைக்கு க.பொ.த உயர்தரத்திலும், சாதாரண தரத்திலும் சித்தியடையாதவர்களை அழைத்திருப்பதால் விண்ணப்பதாரிகளிடம் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. அவ்வாறு தகுதியற்றவர்கள் தேர்ந்தடுக்கப்பட்டமைக்கு அரசியல் செல்வாக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் கருதுகின்றனர். தகுதியற்றவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருப்பதாலும் அவர்கள் தெரிவு செய்யப்படாத நிலையிலும் மலையக ஆசிரியர் நியமனங்களை வழங்க முடியாத நிலை ஏற்படலாம்.

அரசியல் போட்டியினால் தட்டிப்பறிக்கப்படவிருந்த மலையக ஆசிரியர் நியமனங்கள் காப்பாற்றப்பட்டிருந்தாலும் அதிகாரிகளின் தெரிவுமுறையில் ஏற்பட்டிருக்கும் குளறுபடியினால் ஆசிரியர் நியமனங்கள் முற்றாகவே ரத்துசெய்யப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

அரசாங்க வர்த்தமானி அறிவித்தபடி க.பொ.தா. உயர்தர சித்தி, போட்டிப்பரீட்சை புள்ளிகள் விண்ணப்பதாரி தேர்ந்தெடுத்திருக்கும் பாடசாலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தகுதியானவர்களை தெரிந்தெடுத்து ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் போட்டிப்பரீட்சை புள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைக்கான புள்ளிகள் என்பன பகிரங்கப்படுத்தப்பட்டே நேர்முகப்பரீட்சை நடத்தப்பட வேண்டும்

# சிக்குன் குன்யா பீதி திட்டமிட்ட மாபியா சதி

'சிக்குன் குன்யா' என்ற வைரஸ் காய்ச்சலின் விளைவாகவன்றி அந்நோய்க்கு கொடுக்கப்பட்ட சில பொருந்தாத மருந்துகளினாலேயே பல மரணங்கள் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கிறனர். அந்நோய் வேதனை மிகுந்ததும் உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பினும் உடனடியாக மரணத்தை விளைவிக்கும் நோயல்ல என்றும் 'பெரிசிட்டமோல்' வில்லைகளை எடுப்பதும் ஜீவனியை குடிப்பதுமே அதற்குரிய சிகிச்சை ஆகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நோய் பற்றி மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள பீதியை கொண்டு தனியார் மருத்துவமனைகளும் பல தனியார் மருத்துவர்களும் பெரும் சம்பாத்தியம் பண்ணுகின்றனர். தவிர்க்கப்பட வேண்டிய 'டிக்லோபென (Diclofanac) சோடியம்' போன்ற மருந்துகளை தனியார் மருத்துவர்கள் சிக்குக்குன்யா நோயாளிகளுக்கு கொடுத்துள்ளதால் ஏற்பட்ட ஒவ்வாமையால் சிலர் இறந்துள்ளதாகவும் சிலரின் பாதங்கள் அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதுபற்றி உத்தியோகபூர்வமான அறிக்கைகள் எதுவும் வெளியிடப்பட வில்லை.

'சிக்குன் குன்யா' பற்றி அரசாங்கம் சரியாக அறிவூட்டல்களை செய்யாதபடியால் ஊடகங்களில் பயப்பீதியை ஏற்படுத்தும் தகவல்கள் வெளியிடப்பட்டன. அவை திட்டமிட்டு தனியார் மருத்துவத் துறையினரால் வெளியிடப்பட்ட தகவல்களாகும். அதனால் மருத்துவ தனியார் துறைக்கு பாரிய லாபம் கிடைத்துள்ளது. நோயாளிகளுக்கு தேவையற்ற பரிசோதனைகளும் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டதாலும் மருந்துகள் கொடுக்கப்பட்டதாலும் செலவு அதிகம் ஏற்பட்டுள்ளது.

இது மருத்துவ தனியார்துறையினரின் திட்டமிடப்பட்ட 'மாபியா' வேலைத்திட்டமாகும். இந்நோய் 1969 இல் இலங்கையில் ஏற்பட்டுள்ளது. அப்போது அதுபற்றிய தகவல்கள் பெரிதாக வெளியிடப்படவில்லை.

இந்நோயை டெங்கு நோய் பரப்பும் ஏடிஸ் (Ades) என்ற நுளம்பே பரப்புகிறது. நகரப்பகுதிகளில் குவிக்கப்பட்டிருக்கும் குப்பைகள், நீர் தேங்கி நிற்றல் மற்றும் சுகாதாரமின்மை என்பனவற்றால் இலங்கையில் தற்போது டெங்கு நுளம்புகள் அதிகமாக இருக்கின்றன. அவை வேகமாக 'சிக்குன் குன்யாவை' பரப்புவதால் அதிகமானோர் அதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. இந்நோயை டெங்கு நோயை போன்று உடனடியாக மரணத்தை ஏற்படுத்தக் கூடியதல்ல.

இந்நோய் ஆபிரிக்க நாடுகளிலும் பிலிப்பைன்ஸிலும், இந்தியாவிலும் அதிகமாகக் காணப்படுகிறது. இதன் தாக்கத்தையும் பரவலையும் தடுக்க டெங்கு நுளம்பை ஒழிக்க வேண்டும்.

இந்நோய் பரவத்தொடங்கியது முதல் இந்நோய்தான் என்று அறிவிப்பதிலும், அதன்சிகிச்சை பற்றிய முடிவெடுப்பதிலும் மக்களுக்கு அறிவூட்டுவதிலும் சுகாதார அமைச்சு காட்டிய சுணக்கம் மருத்துவ தனியார்துறைக்கு உதவியதாகிறது. அத்துடன் சுகாதார அமைச்சு பொறுப்பற்ற விதமாக நடந்து கொண்டது.

எல்லாத்துறைகளிலும தனியார் பணம் பண்ணும் செயற்பாடு முன்னிலை வகித்து வரும் இன்றைய உலகமயமாதல் சூழலில் சுகாதாரத்துறையும் அதற்கு விதிவிலக்கல்ல. சிக்கின் குனியா காய்ச்சலும் பணம் பண்ணுவதற்கு நல்ல வசதியாக்கப்பட்டுள்ளது. அதேவேளை மரண பீதியும் பரப்பப்பட்டு வருகின்றது.

# கோக் நச்சுப் பானத்திற்கு ஒரு விளம்பரம்

அமெரிக்க நச்சுப் பானம் கொக்கா கோலா என்பது உலகறிந்த விடயம். இலங்கையில் அதனை உறுஞ்சி இழுத்து "கோக் அடிக்கும்" நவநாகரீகம் பல வழிகளிலும் விளம்பரம் செய்யப்படுகிறது. இங்கு நடிகர்களின் கதை அதிகம் செல்லாததன் காரணமாக கிறிக்கட் ஆட்ட நாயகர்களை கொக்கா கோலா அதிக விலை கொடுத்து வாங்கி விளம்பரம் செய்கிறது. அண்மைய விளம்பரத்தில் குமார் சங்ககாரா, மகில ஜயவர்த்தனா ஆகிய இருவரும் குட்டைப் பாவாடைக் குமரிகளுடன் இணைந்து கொக்கா கோலாவைக் குடிக்கத் தூண்டுகிறார்கள். கிறிக்கட் சூதாட்டத்திற்குள் மயங்கி நிற்கும் ரசிகர்களுக்கு அமெரிக்க மூத்திரமான கொக்கோ கோலா மேற்படி விளம்பரம் மூலம் மேலும் திணித்துப் பருக்கப்படுகிறது.

ஊடகங்கள் அனைத்திலும் கொக்கோ கோலா விளம்பரம் கொடி கட்டிப்பறக்கின்றது. கோக்- பெப்சி போன்ற அமெரிக்க பல்தேசியக் கம்பனிகளின் மென்பான உற்பத்தி உலக நாடுகளில் ஆதிக்கம் பெற்று வருவதுடன் மக்களின் ஆரோக்கியத்தையும் கெடுத்து வருகின்றன. இத்தகைய நச்சுப் பானங்களால் நாள்ாந்தம் நமது மக்களின் பணம் வெளியே சென்றுகொண்டிருக்கிறது. இவற்றைப்பற்றி நமது ஆளும் முதலாளித்துவ ஆட்சியார்களுக்கு அக்கறை கிடையாது. இந்தியா போன்று கோக் பெப்சிக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் 25 வருட யுத்தத்தில் இலாபங்கள் அடைந்து கொழுத்து வளர்ந்தவர்கள்

- பேரினவாத ஆளும் வர்க்க ஆட்சிகளின் தலைவர்கள்
- பேரினவாத அரசியல் தலைமைகள்
- ஏகாதிபத்திய- பிராந்திய மேலாதிக்க முதலீட்டாளர்கள்.
- படைகளின் உயர் நிலை தலைமை அதிகாரிகள்
- வெளிநாட்டு ஆயுத வியாபாரிகள் உள் நாட்டு ஆயுதத் தரகர்கள்
- பெரும் முதலாளிகள் கொள்ளை லாப வியாபாரிகள்
- அரச சார்பற்ற நிறுவனங்களின் இயக்குனர்கள்- உயர் பதவி வகிப்போர்.
- கொலை கொள்ளை கப்பம் பெறும் ஆயுத தாரிகள்

**அதேவேளை**

நாட்டின் தமிழ் சிங்கள முஸ்லீம் மலையகத் தமிழ் மக்கள்

**பெற்றுக் கொண்டவைகள்**

உயிரிழப்புகள், இரத்தம், கண்ணீர், வெயர்வை, இடப்பெயர்வு, சொந்தழிவுகள் வறுமை நோய்கள் வேலை இன்மை மற்றும் வாழ்க்கை நெருக்கடிகள்.

# கருணாநிதியின் கடைக்கண் பார்வை ஈழத்தமிழருக்கு எப்படி உதவும்!

முழு இந்தியாவையும் அமெரிக் காவின் கைகளுக்கு தத்தம் செய்து கொடுக்கிறார் மன்மோகன் சிங். அதை விடவும் விஷேடமாக தமிழக த்தை அமெரிக்காவின் காலடியில் தாரை வார்க்கிறார் கருணாநிதி. இந்தக் கோடீஸ்வர உலகத் தமிழ்த் தலைவர் ஈழத் தமிழருக்கு உதவப் போவதாக சினிமா வசனம் பேசியி ருக்கிறார். இதனைக் கேட்டு இலங் கையில் சில தமிழர்கள் ஆ. ஊ.... என்று நிற்கிறார்கள். கருணாநிதி அழகு தமிழில் அடுக்கு மொழியில் வசனம் பேசுவதில் வல்லவர். ஆனால் முதலாளித்துவ அரசியலில் குள்ளத் தனங்கள் புரிந்து இன்றும் பெருமுதலாளியாக முதல்வராக நீடித்து வருபவர். ஈழத் தமிழர் பிரச் சினையில் விலாக்குதனம் புரிபவர். சேர சோழ பாண்டிய மன்னர்களின் வழித் தோன்றல்களான ஈழத்த மிழர் பாதிக்கப்படுவதைத் தடுத்து அவர்களைப் பாதுகாப்பது தமிழகத் தின் பொறுப்பு என்று கூறி இருக் கிறார். போதாக்குறைக்கு மகள் கனிமொழியையும் சற்று காரசா ரமாகப் பேசிக் கொள்ளுமாறு கூறி களம் இறக்கி இருக்கிறார் போலும். இரண்டு மாதங்களுக்கு முன்பு தமி ழகம் வந்து கருணாநிதியைச் சந்தி க்கவும் அதன் பின் டில்லி சென்ற பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக் கவும் காத்து நின்று கைகூடாது திரும்பியவர்கள் தமிழக் கூட்டமை ப்பின் தலைவர்கள். ஏன் அச்சந்திப்பு நிகழவில்லை என்பதற்கு இன்று வரை காரணம் தெரியவில்லை. தலைகுனிந்த நிலையில் தமிழக் கூட்டமைப்பினர் திரும்பி வந்தமை க்கு வை.கோ. மூலம் சென்றமை ஒரு காரணமோ அல்லது இலங்கை அரசின் மறைமுக அழுத்தம் கார ணமோ தெரியவில்லை.

ஆனால் தற்போது திடீரென கரு ணாநிதியின் கடைக் கண்பார் வைக் கடாட்சம் கிடைத்துள்ளது. அதன்மூலம் கூட்டமைப்பினர் சென்னையில் கருணாநிதியைச் சந் தித்து ஈழத்தமிழர் அவலங்கள் பற்றி விரிவாகவும் விலாவாரியாகவும் எடுத்துக் கூறியுள்ளனர். அத்து டன் பிரதமர் மன்மோகன் சிங்கை யும் சந்தித்து விபரங்களை சமர்ப்பித் தும் உள்ளனர். இரு தலைவர்களு க்கும் பொன்னாடைகள் போர்த்தி வாழ்த்தி வணங்கி திரும்பியுள்ள னர் சம்மந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர்.

முதல்வர் கருணாநிதியாகிலும் பிர தமர் மன்மோகன் சிங் என்றாலும் அல்லது வை. கோ. திருமாவளவன் ராமதாசசோ அண்மையில் களம் இறங்கி நிற்கும் கவிஞர் கனிமொ ழியோ நேர்மையுடன் நெஞ்சங்க ளில் உள்நோக்கங்கள் இன்றி ஈழத் தமிழர்களுக்காக ஏதாவது செய்ய முன் வந்திருந்தால் அதனை இலங் கைத் தமிழர் வரவேற்பார்கள்.

ஆனால் தத்தமது அரசியல் பொது வாழ்க்கை இருப்பிற்காக எங்களது பிரச்சினையைக் கையில் எடுப்பார் களேயானால் அது கடந்த காலத் தின் தொடர்ச்சியாக மட்டும் தான் இருக்க முடியும் என்றே எதிர்பார் க்க முடியும்.

வை.கோவை ஓரங்கட்டவும் தமிழக மக்களின் சகோதர உணர்வுக ளைத் தமதாக்கிக் கொள்ளவும் கல ங்கி நிற்கும் குளத்தில் மீன் பிடித்து தமது நிலையை வலுப்படுத்தவுமே கருணாநிதி களம் இறங்கியுள்ளார். இதனை அதோ இதோ என ஈழத் தமிழர் எண்ணி ஏமாந்து விடாது இருப்பதே உசிதமானதாகும். இல் லாது விடின் வழமையான வசனங்க ளால் ஏமாந்து கொள்ளும் நிலையே மீண்டும் ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்வது அவசியமாகும். தமிழக த்தின் ஏன் முழு இந்திய உழைக் கும் மக்களினது ஆதரவே ஒடுக்க ப்படும் தமிழ் இனத்திற்கு தேவை யானதாகும். ஆனால் தத்தமது பாராளுமன்ற- சட்டசபை அரசியலு க்காக வெறும் கண்ணீர் வடித்து நிற்கும் தலைமைகளை ஈழத்தமி ழர் நம்புவது அர்த்தமற்றதாகும்.

# ஜனாதிபதியின் தூரநோக்கு!

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது புதல்வரை கட றப்படைப் பயிற்சிக்காக அனுப்பி வைத்திருக்கிறார். பெற்றோர் பௌத்த குரு மார் ஆகியோரின் ஆசீர்வாதம் பெற்றுச் செல்லும் காட்சிகளை ஊடகங்கள் வெளியிட்டன. “நாட்டைப் பாதுகாக்கவென” முப்படைகளில் சேர்ந்து வரும் சிங்கள இளைஞர்கள் யுவதிகளில் ஜனாதிபதியின் புதல்வரும் ஒருவர் போலவே சித்தரிக்கப்பட்டிருந்தது.

இன்று நாளாந்தம் யுத்த முனையிலே சாதாரண விவசாய தொழிலாளர் களின் பிள்ளைகள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடையே சிங்கள மேட்டுக்குடியினரின் முதலாளிகளின் அரசியல் தலைவர்களின் பிள்ளைகள் எவரும் இல்லை. வீர வசனம் பேசும் சிங்களப் பேரினவாதவெறி யர்கள் தமது பிள்ளைகளில் ஒன்றையாவது “நாட்டைக் காக்கும்” யுத்தத் திற்கு அனுப்பி வைக்கத் தயாரில்லை.

இந் நிலையில் ஜனாதிபதி தம்பதிகள் தமது பிள்ளையைப் படையில் பயிற்சி பெற அனுப்பியுள்ளார்களே என எவரும் மூக்கில் விரல் வைக்க வேண்டியதி ல்லை. இது எதிர்கால இளவரசர் பட்டத்திற்கு வருமுன் பெறும் பயிற்சி போன்றதேயாகும். யானை ஏற்றம் குதிரையேற்றம் வில்வித்தை போன்ற வற்றைப் பயில்வது அரசிளங்குமாரர்கள் யுத்தம் செய்வதற்கல்ல. அது அவர் களது ஆளும் அரச லட்சணத்திற்கேயாகும். பிரித்தானிய இளவரசர்கள் கடற்படையில் சேர்ந்து பயிற்சி பட்டம் பெறுவது இப்பொழுதும் நடைமுறை யில் இருந்து வருவதாகும். இது போராடுவதற்கோ நாட்டிற்காக உயிர்து றப்பதற்கோ அல்ல என்பது விளக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வந்த பின் பதவிகள் பட்டங்கள் நியமனங்கள் யாவற்றையும் மிகுந்த தூர நோக்கு டன் செய்து வருகிறார். அவற்றில் ஒன்றாகவே எதிர்கால ஆட்சி அதிகாரத் தில் தனக்குப் பின்பும் தன் வாரிசுகள் இருப்பதை முன்னுணர்ந்து செயல்படு வதன் ஓர் அம்சமே மகன் யோசித்த ராஜபக்ஷவை கடற்படை அதிகாரியா கும் பயிற்சிக்கு அனுப்பி வைத்துள்ளமையாகும்.

## மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு!

இந்நாட்டின் பாராளுமன்ற அரசியல் ஒரு சாபக்கேடு என்றால் அதில் ஜாதிக ஹெல உறுமய என்ற பௌத்த பேரினவான பிக்குமாரின் பாராளு மன்றப் பிரவேசம் இரட்டைச் சாபக்கேடாகும். அண்மையில் தமது நாளாந்த அடிப்படைச் சம்பள உயர்வுக்காக இருவாரங்களுக்கு மேல் வேலை நிறுத் தப் போராட்டம் செய்தவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள். இல ங்கையின் சகலருமே அவர்களது நியாயமான போராட்டத்தை ஆதரித்த னர்.

ஆனால் பேரினவாத வெறியுடன் அலைந்து பாராளுமன்றத்திற்கு உள்ளே யும் வெளியேயும் இனவாத விஷம் கக்கி வரும் ஜாதிக ஹெல உறுமய கட்சி வேறு கதை அளக்கிறது. அதாவது மேற்படி வேலை நிறுத்தம் புலிகளின் தூண்டுதலால் இடம் பெற்றதாகவும் கிழக்கில் தோல்வி கண்டு தப்பி ஓடி வந்து மறைந்து இருந்து கொண்ட புலிகள் தொழிலாளர்களைத் தூண்டி வருவதாகவும் சிங்கள மக்கள் மத்தியில் விஷம் பரப்புகிறது. இத்தகைய கூட்டுக் கதையையும் பேரினவாத வெறிக் கண்ணோட்டத்தையும் சாதா ரண சிங்களத் தொழிலாளர்கள் விவசாயிகள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் இவ்வாறு இனவாதம் பேசும் இத்தகைய பிக்குமார் மஞ்சள் அங்கிக்குள் மறைந்து கொண்டு புத்தர் எதிர்த்த அத்தனை சுக போக வாழ்வையும் அனுபவித்து வருகின்றவர்கள் என்பது பகிரங்கமானதா கும். இந்தப் பேரினவாதப் புளிச்சல் பிக்குகள் சாதாரண சிங்கள தொழிலாளி விவசாயி அனுபவிக்கும் வாழ்க்கை நெருக்கடிகள் துன்பதுயரங்கள் பற்றி அக்கறை இல்லாதவர்கள் இவர்கள் மேட்டுக்குடியினரின் வர்க்கபாசத்திற் கும் அரவணைப்பிற்கும் உரிய மஞ்சள் காவியினரேயாவர். இவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு புலிப்பட்டம் கட்டிய தில் ஆச்சரியம் இருக்க முடியாது.

# குடாநாட்டு விவசாயிகள் மீனவர்கள் எங்கே போவது?

வடபுலத்தில் குறிப்பாக குடாநா ட்டு விவசாயிகளின் நிலை அந்தோ பரிதாபம் என்ற சூழலே காணப்படு கிறது. ஏ 9 பாதை மூடப்பட்டதும் கப்பல் போக்குவரத்து இல்லாமை யும் விவசாயிகளைப் பட்டினி போட வைத்துள்ளது. ஏற்கனவே ஏ9 பாதை மூலம் விவசாய உற்பத்தி களை தெற்கிற்கு சிரமங்கள் மத் தியிலும் அனுப்ப முடிந்தது. ஆனால் இன்று அவ்வாறு இல்லை. அத்து டன் உள்ளூர் சந்தைக்கும் உற்ப த்தி செய்ய முடியாத நிலை நிலவுகி ன்றது. எரிபொருள், மின்சாரம் இல் லாமை மட்டுமன்றி விதைகள் உரவ கைகள் கிருமி நாசினிகள் போன் றன அங்கு இல்லை. அதனால் தற் போதைய விவசாயக்காலம் எவ்வித முன்னேற்பும் இன்றிக் காணப் படுகின்றது. ஒரு லீட்டர் மண்ணெ ண்னை இருநூறு ரூபாவிற்கு மேல் வாங்கி எவ்வாறு நீர் பாச்ச முடியும். வெங்காயம் மிளகாய் மற்றும் மரக் கறி வகைகள் எதுவும் செய்ய முடி யாத அவல நிலை. மீன் பிடி தடுக்கப் பட்டுள்ளதால் ஒரு கிலோ மீன் ஆயி ரம் ரூபா விற்கப்படுவதை யாரும் நம்ப முடியுமா? விவசாயிகளும் மீன வர்களும் இவ்வாறு இருக்கும் போது குடாநாட்டில் போஷாக்கு உள்ள உணவை மக்கள் எப்படி பெற முடியும். ஒரு முட்டை ஐம்பது ரூபா என்றால் சத்துணவிற்கு எங்கே போவது. இதனால் தான் சிக் கின்குனியா போன்ற காய்ச்சலைக் கூட தாங்கிக் கொள்ள முடியாது மரணங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. தமக்கான மரக்கறிகளை உற்பத்தி செய்யும் மீன் வகைக ளைப் கொண்டும் ஓரளவிற்கு போஷாக்குடன் வாழ முடிந்த குடா நாட்டு மக்கள் திட்டமிட்டே இன்று ஒடுக்கப்படுகின்றனர். ஒரு நாளை க்கு வடக்கிற்கும் தெற்கிற்குமிடை யில் ஏ9 பாதை மூலம் நானூறு லொறிகள் வரை பொருட்களை ஏற்றி இறக்கின. ஆனால் இன்று ஓரிரு கப்பல்களில் அரிசி, சீனி, மாவு, பருப்பு மட்டும் அனுப்பப்படுவ தால் ஆறு லட்சம் மக்களின் அடிப் படை அத்தியாவசிய உணவுத் தேவையை பூர்த்தி செய்து விட முடி யாது.

குடாநாடு ஏற்கனவே ராணுவக் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்து வருகின்றது. ஏ9 பாதையை மூடிய தன் ஒரு நோக்கம் குடா நாட்டு மக் களை பட்டினி போட்டு பணிய வைக் கும் ராணுவத் தந்தி ரோபாயம் என்றே கூற வேண்டும். குறிப்பாக விவசாயிகள் மீனவர்கள் ஆகியோ ரை செயலிழக்கச் செய்வதன் மூலம் ஆறு லட்சம் மக்களையும் போஷாக் கற்றவர்களாக்கி, நோயாளிகளா க்கி, நடமாட முடியாதவர்களாக மாற்றுவதன் மூலம் பேரினவாத நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கேயாகும். ஆக்கிர மிக்கப்பட்ட மண்ணிலே தமது இரு பபிற்கும் பாதுகாப்பிற்கும் ஒரு ராணுவம் எதை எதைச் செய்ய முடியுமோ அவ்வாறு நடந்து கொள் ள முற்படுவது போன்றே விடயங் கள் முன் நெடுக்கப்பட்டு கின்றன என்று கூறுவது மிகைப்ப டுத்தப்ப ட்ட ஒன்றல்ல.

எனவே ஏ9 பாதை திறக்கப்பட் டாலே குடா நாட்டு விவசாயிகள் தற்போதைய அவலத்திலிருந்து மீள முடியும். அதே போன்று கடல் மீதான கடுமையான கட்டுப்பாடு கள் எடுக்கப்பட்டாலே மீனவர்கள் தம் தொழிலைச் செய்ய முடியும்.

இவற்றை பேரினவாத ஒடுக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டு மக்களை ஒடுக்கி வரும் இன்றைய அரசாங்கம் எந்தளவிற்கு செய்யும் என எதிர்பார்க்க முடியும். மக்களை வாட்டி வதைத்து ஜனநாயகம் அல்ல. பாசிசம் என்றே வரலாறு பாடம் சொல்லித் தந்திருக்கிறது. அதை யே பல பக்கங்களிலும் காண முடிகி றது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக சங்கம் நடாத்திய தொழிலாளர் மாநாடு

தோட்ட தொழிலாளர்கள் மலையக ஆதிக்க தொழிற்சங்க தலைமைகளின் ஏமாற்றுத் தனங்களுக்கு அடிபணியாது தமது வேலை நிறுத்தப் போராட்டங்களை முன்னெடுத்தனர். அச்சந்தர்ப்பத்தில் டிசம்பர் 4ஆம் திகதி பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக சங்கத்தின் அழைப்பில் தோட்டத்தொழிலாளர்களுக்கான சம்பளவுயர்வை வற்புறுத்தியும் நியாயமான சம்பளத்திட்டத்தை வென்றெடுக்க மாற்று நடைமுறைகளை தீர்மானிக்கவும் தொழிளலார் வர்க்கத்திற்குரிய சக்திமிக்க தொழிற்சங்க இயக்கத்தை கட்டிவளர்க்கவும் தொழிலாளர் மாநாடு நடத்தப்பட்டது.

இதில் பாட்டாளிவர்க்க புதிய- ஜனநாயக சங்கத்தினது அழைப்பை ஏற்றுக்கொண்டு பல தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு ஆழமான கலந்துரையாடல்களை செய்த பின்னர் பல தீர்மானங்களை நிறைவேற்றின. அத்தீர்மானங்களை நடைமுறைப் படுத்த மாற்று குழுவொன்றையும் இம் மாநாடு அமைத்தது.

அத் தீர்மானங்களாவன.

1. பெருந்தோட்டக் கம்பனிகள் கொடுப்பதாக கூறும் ரூபா 160 அடிப்படை சம்பளத்தை ஏற்றுக்கொண்டு தோட்ட தொழிலாளர்கள் செய்து வரும் மெதுவான வேலை உட்பட அனைத்து போராட்டங்களையும் கைவிடும்படி வற்புறுத்தும் இ.தொ.கா,தொ. சங்கம், பெருந் தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி ஆகியவற்றின் தீர்மானத்தை இம் மாநாடு கண்டித்து நிராகரிக்கின் றது.

2. இ.தொ.கா, இ.தே.தோ, தொ.சங்கம், பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி தவிர்ந்த ம.ம.மு, தொ.தே. சங்கம், இ.ஐ.தொ.மு போன்ற தொழிற்சங்கங்கள் நியாயமான சம்பளவுயர்வை வென்றெடுப்பதற்காக (05-12-2006) அன்று முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடும்படி விடுத்த அழைப்பை அம்மநாடு நிபந்தனையுடன் ஏற்று அங்கீகரித்தது.

சம்பளவுயர்வை வென்றெடுப்பதில் அவையும் இ.தொ.கா, இ.தே.தோ .தொ சங்கம் போலன்றி அவர்களின் அழைப்பை ஏற்று சம்பளவுயர்வை வென்றெடுப்பதற்கான வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடும்படி அம்மாநாடு அனைத்து தொழிலாளர்களையும் கேட்டுக் கொண்டது.

3. இதுவரையில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு வரும் இ.தொ.கா, இ.தே.தோ.தொ. சங்கம் பெருந்தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி ஆகியன கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் அந்தஸத்திலிருந்து உத்தியோகபூர்வமாக விலகிக்கொள்ள வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்தியது.

4.பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்குமிடையிலான கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களின் சார்பில் அனைத்து தொழிற்சங்கங்களினதும் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட வேண்டும் என்று அம்மாநாடு வற்புறுத்தியது.

5. தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக குறைந்தது ரூபா 350/= ஐ தோட்டக் கம்பனிகள் வழங்க வேண்டும் என்று அம்மாநாடு வற்புறுத்தியது.

6. சம்பளவுயர்வை வென்றெடுப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட சகலவிதமான தொழிற்சங்கப் போராட்டங்களையும் பல முனைகளிலும் முன்னெடுக்க வேண்டும் என அம்மாநாடு தீர்மானித்தது.

7. ஒவ்வொரு வருடமும் அல்லது இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை சம்பள உயர்விற்காக தோட்டத் தொழிற்சங்கங்களும் தோட்டக் கம்பனிகளும் இழுபறிபடாமல் சம்பளவுயர்வை உறுதி செய்யும் நியாயமான சம்பளத்திட்டமொன்று வகுக்கப்பட்டு அதன்படி வருடாந்தம் கிரமமாக சம்பளவுயர்வுகள் வழங்கப்பட வேண்டும். அத்திட்டத்தில் அடிப்படை சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுகளும் ஏனைய விசேட கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்பட வேண்டும்.

8. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளவுயர்வை உறுதி செய்வதற்கு அரசாங்கம் உரிய பங்களிப்பை வழங்குவதுடன் கூட்டு ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாக அரசாங்கம் இருக்க வேண்டுமென அம்மாநாடு கேட்டு கொண்டது.

9. பெருந்தோட்ட கம்பனிகள் நியாயமான சம்பளவுயர்வை வழங்காவிடின் நியாயமான சம்பள திட்டத்தினை ஏற்படுத்துவதற்கு இணங்காவிடின் குத்தகை ஒப்பந்தத்தை இரத்து செய்து விட்டு தோட்டங்களை விட்டு வெளியேற வேண்டுமென அம்மாநாடு கேட்டுக் கொண்டது.

10. தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கும் தடைவிதிக்கும் அவசரகால சட்ட விதிகளையும் ஏனைய விஷேட நடவடிக்கைகளையும் அரசாங்கம் வாபஸ் பெறுவதுடன் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் போராட்டங்களையும் மீள உறுதிசெய்யும்படி அரசாங்கத்தை அம்மாநாடு வலியுறுத்தியது.

# தொழிற்சங்கவாதி தோழர் மணியத்திற்கு அஞ்சலி

இறக்குவரை நீண்ட நாட்களாக இடதுசாரி இயக்கத்தில் முழுநேர ஊழியராக வேலைசெய்த தோழர் வி.எஸ்.மணியத்தின் இறுதி நிகழ்வுகள் பற்றி எதுவுமே பேசாமல் இருக்க முடியாது. உழைப்பிற்கான உத்தியோகத்தை உதறிதள்ளிவிட்டு சமூக உணர்வுடன் லங்கா சமசமாஜக்கட்சியில் இணைந்து முழுநேர ஊழியரானார். பின்னர் நவசமசமாஜக்கட்சியுடன் இணைந்து செயற்பட்டார். இறக்கும் போது நவசமசமாஜக்கட்சியினதும் இடதுசாரி முன்னணியினதும் மத்தியகுழு உறுப்பினராக இருந்துள்ளார். ஏறக்குறைய 40 வருடங்களாக அவர் இடதுசாரி இயக்கத்தில் இணைந்து செயற்பட்டார்.

அவர் இரத்தினபுரி மாவட்டத்தை சேர்ந்தவர். இன்று இன்னொருவரின் நலன் பற்றிய சிந்தனையே இல்லாது வாழும் உலகமயமாதல் வாழ்க்கை முறையுடன் ஒப்பிட்டால் தோழர் மணியம் போன்றவர்களின் வாழ்க்கை எவ்வளவோ மேலானதும் அர்த்தமுள்ளதுமாகும். அவர் கொழும்பிலுள்ள சேரிப்புறத்து மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கான போராட்டங்களுடன் தன்னை பிணைத்துக் கொண்டவர். தொழிற்சங்க இயக்கத்தில் நீண்ட நாள் அனுபவம் கொண்ட அவர் தொழில் நீதி மன்றங்களில் தொழிலாளர்களுக்காக வாதிட்டு நியாயங்களைப் பெற்றுக்கொடுத்துள்ளார். அத்துடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதிலும் அவர் கடுமையாக உழைத்துள்ளார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப்பற்றி சிங்கள மக்கள் மத்தியில் நவசமசமாஜக்கட்சி, புதிய இடதுசாரி முன்னணி ஆகியவற்றின் பிர சாரவேலைத்திட்டங்களில் முன் னின்று செயற்பட்டுள்ளார்.

தொழிற் சங்கப் போராட்டங்களின் போது 1988, 1989 காலகட்டங்களிலும் தற்போதும் கூட உயிருக்கு அச்சுறுத்தல் இருந்த போதும் துணிவுடன் செயற்பட்டார். அவ்வாறானவரின் வாழ்க்கை பெறுமதியானதேயாகும். அதனால் அவரின் இறப்பு மிகவும் துயரமானதாகும்.

எனினும் அவரது இறுதி நிகழ்வுகள் ஒரு இடதுசாரிக்குரிய, மாக்சிஸ்ட்டுக்குரிய மதிப்பு மரியாதைகளுடன் இடம்பெறாமை வருத்தத்திற்குரியது. அவரது கட்சித் தலைவர்கள் அவரது இறுதி நிகழ்வுகளை பொறுப்பேற்று நாடாத்தி இருந்த போதும் அவர்கள் சில பிற்போக்குத் தலைவர்களின் மரணத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தை தோழர் மணியத்தின் மறைவிற்கு கொடுக்கவில்லை என்றே கூறுதல் வேண்டும்.

இடதுசாரிகளின் பங்களிப்பை திட்டமிட்டே முதலாளித்துவவாதிகள் மறைத்து வருகின்ற சூழலில் தோழர் மணியத்திற்கு ‘செய்யப்பட்ட இறுதி மரியாதை ஒரு இடதுசாரிக்குரிய மரியாதையாக அமையவில்லை.

அவர் ட்ரொஸ்கிய தத்துவத்தை ஏற்றுக் கொண்ட நவசமசமாஜக்கட்சியில் சேர்ந்து இயங்கியபோதும் சமூக உணர்வுடன் தொழிலாளர் வர்க்க உணர்வுடன் செயற்பட்டார் என்பதையும் சாதாரண மக்களின் வாழ்விற்காகவே அவர் உயிர் வாழ்ந்தார் என்பதையும் மறுக்க முடியாது. ஒருவரின் வாழ்வு விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டதாக கருத்து வித்தியாசங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்க முடியாது. ஆனால் அவரின் வாழ்வில் முழுமையான இலக்கு எதை நோக்கியதாக இருந்தது என்பதே முக்கியமானது.

அந்த அடிப்படையில் அவரை ஒரு இடதுசாரி முழுநேர அரசியல் தொழிற்சங்க நடவடிக்கையாளர் என்பதை ஏற்றுக் கொண்டு புதிய பூமி அவருக்கு புரட்சிகர அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது. அவரது நவசமசமாஜக்கட்சி, இடதுசாரி முன்னணி, குடும்பம் என்பவற்றின் சோகத்தில் பங்கெடுத்துக் கொள்கிறது.

# கிட்டு எழுதும் கடிதம்

## தோட்டத் தொழிலாளர்களின் போராட்ட உணர்வு வாழ்க!

எனது வணக்கங்கள்,

இன்றைய காலகட்டம் போராட்டம் மிகுந்த காலப் பகுதியாகும். சம்பள உயர்வு தொடர்பிலே உங்கள் உறுதி மிகுந்த வேலைநிறுத்தம் எனக்கு மிகுந்த மனமகிழ்வை ஏற்படுத்துகிறது. மெல்ல வேலை செய்தல் போன்ற பசப்புகளுக்கு ஏமாறாமல் உங்கள் பலத்தையும் சாணக்யத்தையும் சரியாக பிரயோகித்துள்ளீர்கள். இந்த நேரத்தில் எனது எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தற்போது மேற்கொண்டு வரும் இந்த போராட்டமானது எந்தச் சக்திக்கும் அடிபணியாமல் தம்மாலேயே தலைமையேற்று முன்செல்லும் ஓர் போராட்டம் என்பதில் எனக்கு நிறையவே பெருமிதம். இவ்வாறு மேலும் உறுதியாக இருந்து நம்மவர்கள் போர்க்குணத்தையும், வர்க்க குணாம்சத்தையும் கூர்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த காலகட்டத்தில் நாம் அனுபவங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். தொழிற்சங்களின் இரட்டை வேடத்தன்மை அம்பலப்பட்டு அம்மணமாய் நிற்கின்றன. இந்த சமயத்தில் சிலர் சொல்வதை கேட்டால் சிரிப்புத்தான் வருகிறது. “மக்களைக் கஷ்டப்படுத்தாமல் சம்பள உயர்வு பெற்றிருக்கலாம்” என்கிறார்கள். காலங்ச ாலமாக காட்டிக் கொடுத்தது தானே தாத்தா முதல் பேரன் வரையான வரலாறு.

இவ்வளவு கால பாராளுமன்ற தொழிற்சங்க சொகுசு வாழ்க்கையில் இவர்கள் தோட்ட மக்களுக்கென்று எதனை செய்தார்கள். “எமது செருப்பிற்கு மக்கள் வாக்களிப்பார்கள்? என்று மக்களை கேவலப்படுத்தியவர்கள் தானே இவர்கள். நாங்கள் உங்களிடமோ கம்பனியிடமோ பிச்சைக் கேட்கவில்லையே. எமது உழைப்பிற்கான எமக்குரிய சம்பளவுயர்வைத்தானே கேட்கிறோம். இவர்கள் எம்மை போராட வக்கில்லாதவர்கள் என்று நினைத்துக் கொண்டார்களா?

இந்தக் கருங்காலிகளுக்கு எமது போராட்டம் நல்ல சவுக்கடி, நாங்கள் இன்று சுயமாக போராடத் துணிந்ததால் தான் இந்தக்கலக்கம். சம்பளவுயர்வு விடயத்தில் அரசாங்கம் பச்சோத்தித்தனமாக நடந்து கொள்கிறது. சம்பளப் பிரச்சினைக்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்கிறார்கள். தேயிலைத் தோட்டங்களை கம்பனிகளுக்கு தாரைவார்த்து கொடுத்தது யார்? மக்களின் குற்றமா? அரசுதானே அன்று தோட்டங்களை கம்பனியிடம் அடகு வைத்தது. அதற்கு தொழிற்சங்க தாத்தாக்களும் தாதாக்களும் ஆதரவ கொடுத்தவர்கள் தானே.

வாக்குப் பொறுக்க மட்டும் தோட்டத்துக்கு வரும் அரசாங்கக் கட்சியினர் இந்த விடயத்தில் கம்பனிக்கு கை கொடுப்பதில் வியப்பேதுமில்லை. கம்பனியின் வரிப்பணத்தின் பெறுமதிதான் இவர்களுக்கு தெரியும். மக்களைப் பற்றி இவர்களுக்கென்ன? எம்மை ஒப்பந்த கூலிகளாய் கொத்தடிமைகளாய் மாற்றிவிட்டார்களா? ஆண்டாண்டு காலம் உழைத்துக் கொடுத்த எமக்கு முதலாளிகளின் அரசு எமக்கு பசியை தான் பரிசாக தந்திருக்கிறது.

கம்பனிகள் தொழிலாளர்களுக்கு சம்பளவுயர்வு கொடுத்து தோட்டங்களை நடத்த முடியாவிடின் மீளவும் அரசிடமே ஒப்படைக்கட்டும். நாமும் அரசுடன் பேசலாம் அல்லது போராடலாந்தானே! கம்பனிக்கு சுரண்டி சுரண்டி சுத்த லாபம் பெறுவது மாத்திரமே நோக்கு, அது தனது முதலாளித்துவ நலனில் இருந்து என்றுமே கீழிறங்காது.

தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாக முடிவெடுக்கக் கூடிய தகுதி அவர்களுக்கே உரியதாகும். மாறாக அரசுக்கோ, தொழிற்சங்கத்திற்கோ, கம்பனிக்கோ கிடையாது. மலைபோல் உயர்ந்து நிற்கும் விலைவாசியால் தமது அடிப்படைத் தேவைகளையே பூர்த்தி செய்ய முடியாத தோட்ட மக்களே தமது வேதனம் தொடர்பில் முடிவெடுக்க வேண்டும்.

முதலாளித்துவ அரசு தொழிலாளர்களை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. அவர்களுக்கு அவர்களது இருப்பைச் சுற்றியே தான் கவனம் அனைத்தும். எமது போராட்டத்தை நலிவடையச் செய்ய பல கயவர்களும் முனைப்போடு செயற்படுகிறார்கள். எமது போராட்டத்தை சிதைப்பதற்கு நம்பிக்கையீனமான கதைகளை பரப்பி விடுகிறார்கள். இதில் கவனமாக இருந்து சவால்களை சந்திக்க வேண்டும்.

இந்த நேரத்தில் இன்னும் சில முடிவுகளை தீர்க்கமாக எடுக்க வேண்டிய காலத்தேவையும் எம்மிடையே காணப்படுகிறது. தொழிலாளர் நலன் பேணும் புரட்சிகர மாற்றுத் தொழிற்சங்கப் பாரம்பரியத்தை கட்டி வளர்க்க வேண்டும். அதன் மூலமே பழைய பண்ணையார் முறையிலான தொழிற்சங்க ஆதிக்கத்தை முறியடித்து தொழிலாளர்கள் போராட்டப் பாதையில் முன்னேற முடியும்.

எமது அனைத்து உரிமைகளும் வென்றெடுப்பதற்கு இதே மாதிரியான வெகுஜனப் புரட்சிகரப் போராட்டங்களே தேவையானதாகும். சோஸலிஸ அமைப்பில் தான் தொழிலாளர்களுக்கு உண்மையான விடுதலை. அது வரையில் எமது போராட்டம் தொடரட்டும். புரட்சி வெல்லட்டும்.

நன்றி நண்பன்

கிட்டு

10- 12- 2006

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි
Puthiya Poomi
சுற்று 14 ஜனவரி 2007 பக்கம் 12 விலை 15/ சுழற்சி 99

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

## மனித உரிமைகளை மறுக்கும் மஹிந்த சிந்தனை

மனித உரிமைகளுக்கான ஆசிய நிலையம கடந்த மாதக்கடைசியில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. 2002 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மிடையில் கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை சரியாக அமுல் படுத்தப்படாததன் விளைவாகவே அதிகமாக மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர்கள் காணாமல் போதல், கடத்தப்படுதல் கொலை செய்யப்படுதல், சித்திரவதைக்குள்ளாக்கப்படுதல், தமிழ்ப்பெண்கள் ஆயுதப்படையினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தல் போன்றன அண்மைக்காலத்தில் மிகவும் அதிகரித்திருப்பதை அவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. தமிழ் ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்பட்டமை கடத்தப்படுகின்றமை பயமுறுத்தப்படுகின்றமை போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை குறித்து ஐ.நா. சபையின் மனித உரிமைகள் குழுவும், ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும், சர்வதேச மன்னிப்பு சபையும் தொடர்ந்தும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன.

யுத்த சூழ்நிலைகளால் இவ்வாறான மீறல்களும், அடக்குமுறைகளும் இடம்பெறுவது பற்றி அரசாங்கம் காரணம் கூறமுடியாதளவிற்கு அரசாங்கத்தரப்பின் மீதே அதிகமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. சாதாரண குற்றமொன்றிற்காக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரை 24 மணித்தியாலத்திற்கு மேல் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருக்க முடியாது என்ற குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் ஏற்பாடு 48 மணித்தியாலம் தடுத்துவைக்கலாம் என்று 2005 ஆண்டு திருத்தப்பட்டது. தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளதாகவும், புலனாய்வு துறை சிறப்பாக இயங்குவதாகவும் கூறப்பட்டாலும் சந்தேக நபர் ஒருவர் அதிகமான நேரம் பொலிஸ் கட்டுப்பாட்டில் வைக்கப்படுவது எதற்காக? பொலிஸ் கட்டுக்காவலில் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் சந்தேக நபருக்கு தொல்லை தருவதாகவும், ஆபத்து நிறைந்ததாகவுமே இருக்கும் என்பதை எல்லோருமே பொதுவாக ஏற்றுக்கொள்வார்கள். சந்தேக நபர்ரொருவரை 48 மணித்தியலயாலங்கள் பொலிஸ் கட்டுக்காவலில் வைத்திருக்கலாம் என சட்டமாக்கப்பட்டமையே அடிப்படையில் எதிரானதாகும்.

அத்துடன் 2002 யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபிறகு கைது செய்யப்பட்ட தீவிரவாத சந்தேக நபர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்ட ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படவில்லை. அண்மையில் ஜனாதிபதியின் பிரகடனத்தை அடுத்து அச்சட்ட ஏற்றுபாடுகள் அமுலுக்கு வந்திருக்கிறன. இது யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலாகும். அத்தோடு அச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் கடுமையான ஒழுங்குவிதிகளும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஒழுங்குவிதிகள் அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களையும் தடுக்கின்றன. கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் முற்றாக தடை செய்யப்படுகின்றது. அவசரகாலச்சட்ட விதிகளும் மாதாந்தம் நீடிக்கப்பட்ட வண்ணமிருக்கின்றன. அவையும் சாதாரண உரிமைகளை பறிக்கின்றன. இவ்வாறு ஏற்கனவே இருக்கின்ற உரிமைகளை பறிக்கும் வகையிலும், சர்வதேச மனித உரிமைகளை மீறுகின்ற வகையிலும் இலங்கை அரசாங்கம் அடக்கு முறைச் சட்டங்களையும், விதிகளையும் அமுல்படுத்தி வருகின்றது. இதன் மூலம் இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை மதிக்காத அடக்குமுறை அரசாங்கம் என்று கணிக்கப்படுகிறது. இவற்றுக்கும் அப்பால் அரச படைகள், துணைப்படைகள், குழுக்கள் போன்றவற்றின் கைதுகள், கொலைகள், தாக்குதல்கள் அத்துமீறல்களும் இடம்பெறுகின்றன. இவற்றை தேசிய பாதுகாப்பின் பேரில் நியாயப்படுத்திவிட முடியாது. அரசாங்கம் இவை பற்றி விசாரிப்பதாக கூறினாலும் விசாரணைகள் சரியாக நடைபெறவும் இல்லை. குற்றவாளிகள் சட்டத்தின் முன்நிறுத்தப் படவுமில்லை. குற்றச் செயல்கள் குறையவுமில்லை. இக்குற்றச் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திடமே இருக்கிறது.

வடக்குகிழக்கில் விமானப்படையிரால் நடத்தப்பட்டுவரும் விமானக் குண்டுத்தாக்குதல்களால் சாதாரண மக்களே பாதிக்கப்படுகின்றனர். அது குறித்து அரசாங்கம் பொறுப்புடன் கருத்துக்களை தெரிவிப்பதாகக் கூட இல்லை.

சர்வதேச தராதரங்களுக்கு மாறாக மனிதஉரிமைகள் மீறப்படுவதுடன் உள்நாட்டு சட்டங்கள், விதிகளுக்கு மாறாகவும் மீறப்படுகின்றன. மனித உரிமைகள் மீறப்படுவதாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குரல் கொடுப்பவர்கள் இலகுவாகவும் மிகவும் வசதியாகவும் பிரிவினைவாதத் திற்கு ஆதாரவாளர்கள் என்று முத்திரை குத்தப்படுகின்றனர்.

பிரிவினைவாதப் பயங்கரவாதம் போன்றவற்றுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறிக் கொண்டும் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவது என்ற பேரிலும் சாதாரண மக்களின் உரிமைகளை மறுத்து ஜனாதிபதி ராஜபக்சவின் அரசாங்கம் மிகவும் அப்பட்டமான அதிகாரதுஷ்பிரயோகங்களையும் அத்துமீறல்களையும் செய்துவருகிறது.

இதனால் வடக்கு கிழக்கு மக்கள் மட்டுமன்றி அதற்கு வெளியில் வாழ்வோரும் பாரியபாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர். மனித உரிமை மறுப்பால் அனைத்து இலங்கையர்களுமே பாதிப்படைகின்றனர். இந்நிலை மேலும் விரிவடையக் கூடிய சூழலே உருவாக்கப்பட்டு வருகின்றது. மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி மக்களை பாதுகாத்து மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துவதற்குப் பதிலாக "மஹிந்த ராஜபக்சவின்" பதவியையும் ஆட்சியையும் உறுதிசெய்து கொள்ளும் வகையிலான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கும் போக்குகளே நாளாந்தம் முனைப்படைந்து வருகின்றன. இதனையே மகிந்த சிந்தனைய வெளிப்படுத்துகிறது.

ஆசிரியர் குழு

## கிழக்கில் தொடரும் அவலமும் வாகரையின் சோகமும்



இலங்கை இராணுவத்தின் தாக்குதல் மையமாக கிழக்கு மாகாணம் மாறியுள்ளது. ஏற்கனவே திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் சம்பூரை புலிகளின் பிடியில் இருந்து மீட்டுக் கொண்ட ராணுவம் இப்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரையை நோக்கி முழுக்கவனத்தையும் திருப்பியுள்ளது. நீண்டதூர சுடுகலன்களும் பல்குழல் எறிகணைகளும் வாகரையை நோக்கி ஷெல்மாரி பொழிந்தவண்ணம் உள்ளன. புலிகள் ராணுவத்தை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி வருவதால் பதில் தாக்குதல் நடாத்துவதாகவே ராணுவத் தகவல் மத்திய நிலையம் நாளாந்தம் கூறி வருகின்றது. கிழக்கிலிருந்து விரைவில் புலிகளை விரட்டி விடுவோம் என ராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறி வருகின்றார். அதேவேளை புலிகள் இயக்கமும் தமது தாக்குதல்களை பதில் நடவடிக்கை எனக் கூறி நடாத்தி வருகின்றது.

இத்தகைய தாக்குதல் சூழலில் மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நான்கு வாரங்களில் வாகரையின் மக்கள் விபரிக்க முடியாத அளவுக்கு சுமார் அறுபதினாயிரம் பேர் வரை மனிதப் பேரவலத்திற்கு உள்ளாகி உள்னார். A15 பாதை மூடப்பட்டுள்ளது. அதனால் வாகரைக்கான அத்தியாவசியப் பொருட்கள் எதுவும் எடுத்துச் செல்ல முடியவில்லை. விஷேடமாக லொறிகளில் அனுப்பப்பட்ட உணவுப் பொருட்கள் பாதுகாப்பு இல்லை எனக் கூறி ராணுவத்தால் திருப்பி அனுப்பப்பட்ட நிகழ்வுகள் ஏற்கனவே இடம் பெற்றன. மருந்துகளும் மருத்துவமும் தடைப்பட்டதன் மூலம் மக்கள் எதுவும் செய்ய இயலாத நிலைக்கு ஆளாக்கப்பட்டனர். அதேவேளை விடுதலைப்புலிகள் மக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர் என்ற பிரசாரத்தையும் அரசாங்கம் முன்னெடுத்தது.

இவையனைத்தினதும் விளைவாகவே பேரவலத்திற்கு உள்ளான வாகரை மக்கள் வாகரையை விட்டு வெறியேறி உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து மக்கள் தமது வீடுவாசல்கள் அன்றாடப் பாவனைப் பொருட்கள் ஆடு மாடுகள் அனைத்தையும் கைவிட்டு உடுத்த உடைகளுடன் மிக மோசமான நிலையில் காடுகளின் ஊடாகக் கால் நடையாகவே வருகின்றனர். மிக நீண்டதூர காடு மேடு பள்ளம் தாண்டி வரும் மக்கள் ராணுவத்தால் உருவாக்கப்பட்டுள்ள "றைற்சினா" என்னும் நிலையத்தின் ஊடாக இடைத்தங்கல் முகாம்களுக்கு அனுப்பப்படுகின்ற னர். இவ்வாறு இடம் பெயர்ந்த மக்கள் பதினைந்து முகாம்களில் சுமார் இருபத்தையாயிரம் பேர் தங்க வைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் கடல் வழிமூலம் வந்த மக்கள் படகு கவிழ் ந்ததில் இருபது பேர் வரை நீரில் மூழ்கி இறந்த பரிதாபம் நிகழ்ந்துள்ளது. இவ்வாறு காடுகளிலும் கடலிலும் உயிர் துறப்போர் குழந்தை பிரசவிப்போர் உறவினரைப் பிரிந்து போவோர் தொகை அதிகரித்த வண்ணமே உள்ளன.

இவ்வாறு இடம் பெயர்ந்து வரும் வாகரை மக்கள் மீண்டும் மீண்டும் துன்பச் சுமைகளைச் சுமந்தவர்களே யாவர். அவர்கள் சாதாரண உழைக்கும் தமிழ் மக்கள். கிழக்கு மாகாணம் பொருளாதார கல்வித் துறைகளில் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வந்தது. கடந்த கால் நூற்றாண்டு கால யுத்தம் மேலும் அங்குள்ள சாதாரண தமிழ் மக்களை பல வருடங்களுக்குப் பின்னுக்குத் தள்ளி விட்டுள்ளது. அத்துடன் இரண்டு வருடங்களுக்கு முன்பு இடம் பெற்ற சுனாமிப் பேரழிவும் அம்மக்களை மோசமான வாழ்க்கை நிலைக்குள் அமுக்கிக் கொண்டது. அவற்றிலிருந்து வாகரை மக்கள் மீட்கப்படவே இல்லை.

இவ்வாறான நிலையிலே இப்பொழுது வாகரை மக்கள் சகலவற்றையும் இழந்து இடம்பெயர்ந்தவர்களாகி காடுகள் கடந்து வரும் காட்சிகள் சூடான் சோமாலியா டாவூரில் இருந்து எடுத்துக் காட்டப்படும் படங்களுக்கு ஒப்பானவைகளாகவே தெரிகின்றன. மக்களது நிலை கல்நெஞ்சக்காரர்களையும் கண்கலங்க வைப்பதாகவே உள்ளது. தமது சொந்த உழைப்பால் சொந்த மண்ணிலே வாழ்ந்தவர்கள் இன்று ராணுவத்திடம் சிறு உணவுப் பொட்டலத்திற்காக கையேந்தி நிற்கும் அவலத்தை மனித நேயம் மிக்க எவராலும் சகித்துக் கொள்ள முடியவில்லை.

கிழக்கில் இடைத்தங்கல் முகாம்களில் அடிப்படை வசதிகள் இன்றி நரக வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள் மக்கள். இந்நிலையில் அன்றாட உழைப்பாளர்களான விவசாயிகள் தொழிலாளிகள் சாதாரண மக்கள் எதைத் தான் செய்யமுடியும். கர்ப்பிணித்தாய்மார், பச்சிளம் குழந்தைகள், நோயாளிகள், வயோதிபர் படும் வேதனைகள் பரிதவிப்புகளைப் பார்க்கவே முடியவில்லை. இத்தனைக்கும் நடுவே ஆட்கடத்தல்கள் பழிக்குப் பழியான கொலைகள் நடந்து கொண்டே இருக்கின்றன. விதியே விதியே தமிழச்சாதியை என் செய்ய நினைத்துள்ளாய் என்று நொந்து கொள்வதைத் தவிர மக்களுக்கு அதற்கப்பால் எதையும் எண்ணவோ செய்யவோ முடியவில்லை. பேரினவாத ஒடுக்குமுறையானது அந்தளவிற்கு தலைவிரித்தாடி நிற்கிறது. நீதி நியாயம் அரசியல் தீர்வு பேச்சு வார்த்தை பற்றிப் பேசுவோரின் குரல்கள் எல்லாம் புறக் குடத்து நீராகியுள்ளன. பெரும் நம்பிக்கையுடன் தமிழர் தலைமையால் எதிர்பார்க்கப் பட்ட "சர்வதேச சமூகம்" தன் முகம் திருப்பி நிற்கின்றது. தனது நலன்களும் தேவைகளும் நிறைவேறிய பின் யார் எக்கேடு கெட்டாலும் நமக் கென்ன என்பதே அவர்க ளின் நிலைப்பாடாகும். தொடர்ந்து யுத்தம் செய்து வந்தால் இலங்கையின் எதிர்காலத் தலைமுறையா னது சகல நிலைகளாலும் பலவீனப்பட்டு ஏகாதிபத்தியத்தின் காலடியில் தொடர்ந்து இருந்து வரவே செய்யும். நாட்டைப் பற்றி மக்களைப் பற்றி எதிர்கால அரசியலைப் பற்றி சிந்திக்க முடியாத அளவுக்கு இனங்களை மோதவைத்து யுத்த த்தை நீடிக்கச் செய்வதில் அந்நிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.என்பதே உண்மை நிலை.

கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை அப்புறப்படுத்தி விட்டால் இனப் பிரச்சினை தீர்வைக் கண்டு விடுமா? புலிகளைக் கலைத்துக் கொள்வதாகக் கூறி ராணுவத் தாக்குதல் தொடுத்து பல்லாயிரக் கணக்கான வாகரை மக்களை இரத்தம் கண்ணீர் முகாம் முடக்கல் என்பனவற்றுக்குள் வீழ்த்தி கல்வி சுகாதாரம் உள்ளிட்ட அன்றாட வாழ்வைப் பாழ்படுத்தி பேரினவாத ஆளும் வர்க்கம் எதனைச் சாதிக்கப் போகின்றது. இது தானா பௌத்த தர்மம் கூறும் உபதேசம். இது தானா மகிந்த சிந்தனை, சாதாரண உழைக்கும் சிங்கள மக்கள் இதனை ஏற்கிறார்களா? இல்லை. எல்லைப்புற சிங்கள மக்களும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து அல்லலுறும் சிங்கள மக்களும் ராணுவத் தீர்வை ஏற்க மாட்டார்கள். ஏனெனில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் அதே வலிகளையும் வேதனைகளையும் அவர்களும் நன்கறிவார்கள். வாகரை மக்கள் பட்டு வரும் துன்பங்களையே கந்தளாய் அனுராதபுரம் மற்றும் பல இடைத் தங்கல் முகாம்களில் இருந்து வரும் சிங்கள சாதாரண உழைக்கும் மக்கள் அகதிவாழ்வு அனுபவிக்கிறார்கள். சிங்கள மேட்டுக்குடி பேரினவாத ஆளும் வர்க்கம் ஏதோ அள்ளி அள்ளி இடம் பெயர்ந்த சிங்கள மக்களுக்கு வழங்கி விடவில்லை.

எனவே தான் யுத்தம் சகல மக்களுக்கும் கொடுமையானது. ராணுவத்தீர்வு என்ற நிலைப்பாடு தமிழ் மக்களை அழித்தொழிப்பது மட்டுமன்றி முழு நாட்டையும் அழிக்கும் நடவடிக்கைாயகவே அமைந்து வருகிறது. பேச்சு வார்த்தை மூலமான நியாயமான அரசியல் தீர்வே அடிப்படையா னதும் அவசியமானதுமாகும்.

—வெகுஜனன்—

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# நிபுணர் குழு அறிக்கையும் பேரினவாத நீசத்தனங்களும்

~மோகன்~

இனப்பிரச்சனைக்குரிய தீர்வு தொடர்பான நிபுணர்குழுவின் அறிக்கை ஆலோசனைக்கு எடுக்கப்படுவதற்கு முன்னமே ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் அனைத்துக் கட்சிக் கலந்தாலோசனையிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டுள்ளன. இது ஒரு புறமிருக்க ஜே.வி.பி. யினதும் பிற பேரினவாதிகளதும் ஆதரவில் இயங்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும் பலவேறு பிக்கு அமைப்புக்களும் வேறும் பேரினவாத அமைப்புக்களும் இணைந்து தேசிய அமைப்புக்களின் ஒன்றியத்தை உருவாக்கியுள்ளனர். இவ் ஒன்றியம் நிபுணர் குழுவின் பெரும்பான்மையினர் சமர்ப்பித்த அறிக்கையை ஆலோசனைக்கு எடுக்காமலே நிராகரிக்க வேண்டுமென்று குரல் வைக்க ஆரம்பித்துள்ளன.


இத்தனைக்கும் நிபுணர் குழுவின் பெரும்பான்மையினரது அறிக்கையில் தமிழ்மக்களினதோ மலையகத் தமிழரதோ முஸ்லீம்களதோ அபிலாசைகள் முழுமையாகக் கணிப்பில் எடுக்கப்படவில்லை. சுயநிர்ணயம் என்ற கருத்து எங்கும் கணிப்பிலெடுக்கப்பட்டதற்கான சான்றுகள் இல்லை. சமஷ்டி என்ற சொல் கவனமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. எனினும் பல்வேறு இனமதச் சமூகங்களிடையே ஒரு வகையான உண்மையான அதிகாரப் பங்கீட்டை இயன்ற வரையில் விருத்தி செய்வது பற்றிப் பேசுகிறது. மாகாண சபைகள் மூலமும் உள்ளூராட்சிகள் மூலமும் எல்லாச் சமூகங்களும் அதிகாரம் செலுத்தித் தமது பிரதேசங்களை விருத்தி செய்வது பற்றிப் பேசுகிறது.

இலங்கையின் பல்லின, பலபண்பாட்டு அடையாளம் பற்றிப் பேசுகிற இவ்வறிக்கையில் தேசிய இனங்களென எதுவுமே அடையாளங் காணப்படவில்லை. அரசியல் யாப்பின் முதன்மையும் பிரிவினையைத் தடுப்பதற்கு மட்டுமன்றிக் கிளர்ச்சிகளை அடக்குவதற்கும் சனாதிபதிக்கு பூரண அதிகாரங்களைப் பரிந்துரைக்கிறது.

அதிகாரப் பங்கீடு பற்றிய சிந்தனைகள் இரண்டு அவைகளைக் கொண்ட பாராளுமன்றம் சனாதிபதியின் சமூகத்தினரல்லாத இருவரைத் துணைச் சனாதிபதிகளாக்குவது போன்ற மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தில் தோற்றப்பாடான பகிர்வைப் பற்றிப் பேசுகிறது. மாகாண நிறைவேற்றுச் சபைகளில் ஊழல் பற்றிப் பேசுகிற அறிக்கையின் கவலை உண்மையில் ஊழல் பற்றியதல்ல. வடக்கு கிழக்கில் உள்ள நிருவாகங்களில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் பற்றிய அச்சத்தையே அது புலப்படுத்துகிறது.

பெரும்பான்மையினரிடையிற் கூட வடக்கு- கிழக்கின் இணைப்புப் பற்றி உடன்பாடு காண இயலவில்லை. அதிலுள்ள உடன்பாடின்மை இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வடக்கு கிழக்கு பற்றிய எந்த உடன்பாட்டுக்கும் வர இயலாத சூழ்நிலையில் தீர்வுக்கான முட்டுக்கட்டைகளைக் களைவதற்கான யோசனைகள் நிபுணர் குழுவினிடம் இல்லை என்றே தெரிகிறது. தொடர்பாடல், தரைவழிப் போக்குவரத்து, கடல் வழிப் போக்குவரத்து கடற் பிரதேசம் அயல் வணிகமும் வர்த்தகமும் என்பன மத்திய அரசிடம் இருக்க வேண்டுமென்ற பரிந்துரை மாகாணங்களின் அதிகாரத்தை மிகவும் கட்டுப்படுத்துகின்றவையாம். அதிகாரப் பங்கீட்டைப் பற்றி நிபுணர்களிடையே உடன்பாடின்மை அறிக்கையில் வெளிவெளியாக ஏற்கப்படாவிடினும் அது தொடர்பான விவரங்கள் தவிர்க்கப்படுகின்றமைக்கு வேறு விளக்கம் தெரியவில்லை.


இந்த அறிக்கை நிருவாக அலுவல்களில் மிக நுணுக்கமான விவரங்களுக்குட் புகுந்தாலும் அடிப்படையான பல பிரச்சனைகளைப் பெரும்பாலும் தவிர்த்துள்ளது. பெரும்பாலான இடங்களில் மத்திய அரசாங்கம் குறுக்கிடுவதற்கான உரிமை ஏற்கப்பட்டுள்ளது. இந்தியாவின் மாநிலங்களில் ஒரு காலத்தில் மத்திய அரசு வலியதாக இருந்த போது குறுக்கிட்டு தனக்கு உடன்பாடாக இல்லாத ஆட்சிகளைக்



கலைக்கவும் நெருக்கடிக்கு உட்படுத்தவும் இயலுமாயிருந்ததை விட அதிகமாக இலங்கைச் சூழலில் இந்த ஆலோசனைகளின் கீழாக தீர்வின் கீழ் நிகழும் என எதிர்பார்க்கலாம்.

இந்தக் குழுவில் தமிழ் மக்களது அபிலாசைகளைப் பிரதிபலிக்கிற முறையில் பேசவல்ல எவருமே பங்கு பற்றாதமையும் அதன் உறுப்பினர்களான தமிழர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவானவர்களாகவே அறியப்பட்டுள்ளமையும் நாம் புறக் கணிக்க இயலாதவை. தமிழ் மக்களும் அமைதியை வேண்டுவதாயின் விடுதலைப் புலிகளும் ஏற்கக்கூடிய விதமான ஒரு தீர்வு ஆலோசனையாக இந்த அறிக்கை அமையவில்லை. விடுதலைப் புலிகள் 2003ம் ஆண்டு முன்வைத்த இடைக்கால நிருவாக சுயாட்சி அமைப்புக்கள் பற்றிய விரிவான ஆலோசனைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த அறிக்கை அதி தீவிர சிங்களப் பேரினவாதிகள் தவிர்ந்த பிற சிங்களப் பேரினவாதிகளின் மனம் கோணாத விதமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கை என்பது புலனாகும்.

எனினும் தமிழ் மக்களது உடனடியான சில கவலைகளை அது கணிப்பிற் கொள்கிறது. அதன் காரணமாகவே அதை தீவிரமான சிங்களப் பேரினவாதிகள் எதிர்க்கின்றனர்.



தமிழ் மக்களின் அபிலாசைகளை முழுமையாகக் கணிப்பிலெடுக்கக் கூடிய நிலையில் எந்தப் பேரினவாத அரசாங்கமும் இல்லை என்பதை நாம் அறிவோம். எந்த விதமான உரிமைகளை மறுத்தனால் தமிழ் மக்களிடையே





ஆயுதப் போராட்டக் குழுக்கள் தோன்றின என்பது பேரினவாதிகளும் அறிந்ததே.

இந்த அறிக்கையை நிராகரிப்பதன் மூலம் ஜே. வி. பியும் ஹெல உறுமயவும் அவர்களது அரசியற் கூட்டாளிகளும் எவ்வளவு கீழ்த்தரமான இன வெறியர்கள் என்று விளங் கும். அவர்களைப் பகைக்க விரும்பாமல் சனாதிபதி ராஜப க்ஷவும் அரசாங்கமும் இந்த அறிக்கையின் அடிப்படையிலேனும் தீர்மானங்களை எடுக்கத் தவறுவார்களே என்றால் அவர்களுக்குப் ஜே. வி. பி, ஹெல உறுமய இனவெறி கும்பல்கட்குமிடையே உள்ள வேறுபாடு மிக மேலோட்டமான ஒன்றே என்கிற முடிவுக்குத் தான் வர முடியும்.

மேற்படி நிபுணர் குழுவின் பெரும்பான்மைக்குழு முன்வைத்த ஆலோசனைகள் முழுமையானவையாக இல்லையாயினும் அதனை பேச்சுவார்த்தைக்குரிய ஆரம்ப அடிப்படையாகக் கொண்டு முன்னேறிச் சென்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் சுயாட்சி நோக்கி யசாதமான வழிகளில் பயணிக்க முடியும். இல்லாதுவிடின் கடந்த கால ஆலோசனைகளுக்கு நடந்த அவலமான கதியே ஏற்படும்.

# பயங்கரவாத தடைச்சட்ட விதிகள் யாருக்கு எதிராக நீற்கப்போகின்றன?

~சண் முகம்~

அமெரிக்க ஜனாதிபதி முதல் நம் நாட்டு ஜனாதிபதி வரை "பயங்கரவாதம்" என்பதற்கு எதிராகக் கச்சை கட்டி களத்தில் நிற்பதாகக் கூறியே வருகின்றனர். தனது ஏகாதிபத்திய பொருளாதார அரசியல் ராணுவ தேவைகளின் நலன்களுக்காக அமெரிக்கா விரிந்து செல்லவேண்டியே "பயங்கரவாத எதிர்ப்பு" என்ற ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டது.

இலங்கையின் பேரினவாத ஆளும் வர்க்கமானது தனது கொடிய வர்க்க சுரண்டலையும் ஏகாதிபத்திய அரவணைப்பையும் மறைத்து தேசிய இனங்களை ஒடுக்கி பெரும்பான்மையான சிங்கள மக்களின் கவனத்தை திசை திருப்பி தன்னை மறைத்துக் கொள்ள "பயங்கரவாதத் தடை" என்பதனை கையில் தூக்கி வந்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதியின் இளைய சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோதபாய ராஜபக்ஷ மீதான தற்கொலைத் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அது தோல்வியில் முடிந்தாலும் அதன் தாக்கம் ஜனாதிபதி உள்ளிட்ட முழு அரசாங்கத்தையும் உலுப்பிக் கொண்டது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து அரசாங்கம் புலிகள் இயக்கத்தை தடை செய்யப் போகின்றது என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்படி இடம் பெறவில்லை. அதற்குப் பதிலாக பயங்கரவாத சட்ட விதிகள் புதிதாக இயற்றப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. விதிகள் புதியனவாகிலும் பயங்கரவாத தடைச் சட்டம் 27 வருட பழமை கொண்டதாகும்.

1979ம் ஆண்டில் அன்றைய ஜனாதிபதியான ஜே. ஆர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொண்டு வந்தார். தனது உறவினரும் உயர் ராணுவ அதிகாரியுமான வீரதுங்காவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி பயங்கரவாதத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து, வென்று வருமாறு வேண்டி நின்றார். அன்று ஆரம்பித்த பயங்கரவாத ஒழிப்பு பயணம் இன்றுவரை முடிவடையவும் இல்லை. பயங்கரவாத செயல்கள் என்று கூறப்படுபவை ஒழிக்கப்படவும் இல்லை.

எந்தவொரு பிரச்சினையிலும் அதன் காரண காரியம் கண்டறியப்படவேண்டும். புற நிலை யதார்த்த சூழலில் பிரச்சினை உரியவாறு அணுகப்பட்டாலே அதற்கு நியாயமான தீர்வை ஏற்படுத்த முடியும். அன்றிலிருந்து இன்று வரை பயங்கரவாதம் என்று கூறப்படுவது தேசிய இனப்பிரச்சினையும் அதன் விளைவான போராட்டத்தையும் மையப்படுத்தியதாகவே இருந்து வந்துள்ளது. எனவே தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வைக் கொண்டு வருவதன் மூலமே பயங்கரவாதம் என்று கூறப்படும் எவற்றுக்கும் தீர்வு காண முடியும்.

ஏற்கனவே கொண்டுவரப்பட்டிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் சாதாரண தமிழ் மக்களேயாவர்.

இச் சட்டத்தின் இறுக்கத்தால் பொலீஸ் நிலையங்கள், ராணுவ முகாம்கள், சிறைச்சாலைகள், தடுப்பு முகாங்களில் தமிழர்கள் பட்ட சித்திரவதைகளும் அவலங்களும் விபரிக்க முடியாதவைகளாகும். இந்நிலை 2002ம் ஆண்டின் புரிந்துணர்வு- யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் கீழேயே பெருமளவிற்கு தணிவாகியது. கடந்த நான்கு வருடங்களில் அதன் தீவிரமும் நடைமுறையும் முடக்கம் பெற்றிருந்தது. ஆனால் கடந்த டிசம்பர் 6ம் திகதியுடன் புதிய விதிகளையும் உள்ளடக்கிய நிலையில் மீண்டும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை தமிழ் மக்கள் மீது பாய வைப்பதற்கு கூராக்கப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையிலேயே பயங்கரவாதம் என்பதற்கு புதிய வியாக்கியானம் வரையப்பட்டிருக்கிறது. அவையாவன:

(அ) சகல விதமான சட்டவிரோத செயல்கள்

(ஆ) பலாத்காரம், வன்முறை, பயமுறுத்தல், நிர்ப்பந்தித்தல், மிரட்டல், அல்லது

(இ) தேசிய பாதுகாப்பிற்கு இடைஞ்சல் அல்லது அச்சுறுத்தல்

(ஈ) பொது மக்களைப் பயமுறுத்தல் அல்லது ஒரு தொகுதியினரை அச்சுறுத்தல்

(உ) சமூகத்தின் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் இடைநிறுத்துதல் அல்லது பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தல்.

(ஊ) சொத்துகளுக்கு அழிவு ஏற்படுத்தல் அல்லது நாசம் செய்தல்

(எ) பொது மக்களின் சுகாதாரத்திற்கு அல்லது மக்களின் ஒரு பகுதியினருக்கு சுகாதாரக் கேடு விளைவித்தல்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 9

## காலில் விழுந்து வணங்குதல் மனித சமத்துவம் அல்ல!

பேராசிரியர் சி.சிவசேகரம்

ஒருவரது காலைத் தொட்டு வணங்குவது என்பது முழுமையாகவே ஒருவருக்குக் கீழ்ப்படிவது என்ற பொருளிலே நடக்கிற ஒரு செயலாகும். அதற்கும் அப்பாற் சென்று ஒருவரது காலைக் கழுவி வரவேற்பது பணிவின் இன்னொருபடி எனலாம். அதைவிடவும் அவ்வாறு கழுவிய நீரைத் தமது தலையில் தடவிக் கொள்ளுவதும் பருகுவதுங்கூட ஏதோ ஒரு விதமான பக்தி மேலீட்டாற் செய்யப்படுகிற காரியங்கள். இவை நாம் இன்னமும் காணக் கூடியன. பழக்கப்படாதவர்கட்கு முற் குறிப்பிட்டவாறான நடத்தை அருவருப் பூட்டக்கூடும். அல்லாது போனால் சிரிப்பூட்டவுங்கூடும். காலைத் தொடுவதும் காலடியில் விழுவதும் உபசாரங்கள் என்பதில் ஐயமில்லை. எனினும் அவை இருவர் கையைக் குலுக்குவது போலவோ ஆளுக்காள் கைகூப்பி வணக்கம் கூறுவது போலவோ சமத்துவமான மனித உறவின் அடிப்படையிலான உபசாரங்களல்ல.

பிறர் காலில் ஒருவர் விழுவதைக் காண அருவருப்படைகிற ஒருவர், தன் காலில் இன்னொருவர் விழும்போது எவ்வாறு உணர்கிறார் என்பது இவ்வாறான உபசாரங்கள் பற்றிய அவரது உண்மையான மனநிலையின் அளவு கோலாயிருக்கும் என்று நினைக்கிறேன்.

காலில் விழுவது என்பது குனிந்து காலைத் தொடுகிறது போல ஒப்புக்கான ஒரு செய்கை முதலாக, நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்குவது வரை வேறுபடும். எனினும் இது இந்தியத் துணைக்கண்டத்திற்குரிய ஒரு மரபு எனலாம். சீனாவில் மண்டியிடுவது நிலவுடைமைச் சமூகத்தில் நீண்ட கால மரபாக இருந்து வந்தது. இப்போது அது இல்லை. யப்பானில் மண்டியிடுவது இப்போது பெரும்பாலும் இல்லை எனினும், இடுப்போடு மேலுடலைக் குனித்து வணக்கம் கூறுவது இன்றும் வழமையாக உள்ளது.

இங்கு புத்த பிக்குமாரின் ஆசியைப் பெற முழங்காலை மடித்துக் குனிந்தும் காலடி பணிந்தும் வணக்கம் தெரிவிக்கப்படும். தாய்லாந்தில் மன்னரின் முன்பு அமைச்சர்கள் முதலாக எவரும் முழங்காலில் அமர்ந்து பேசுவதையும் அவ்வாறு அமர்ந்தபடி குனிந்து வணங்குவதையும் காணுகிறோம். இந்தியாவில் புத்த சமயம் அரச அதிகாரத்துடன் நெருக்கமான உறவு பூண்ட காலத்திலிருந்து இவ்வாறான மரபுகள் தோன்றினவோ என நிச்சயமில்லை. ஆனால் இவை புத்தரின் பரிந்துரைகளாக இராது. மனிதரைக் கைகூப்பி வணங்குவது கிழக்காசிய மரபல்ல என்றே நினைக்கிறேன.

மேலை நாடுகளில் நிலவுடைமைச் சமுதாயத்தின் கீழும் மன்னர் ஆட்சியிலும் தலை குனிந்து வணக்கம் தெரிவிப்பதுடன் மண்டியிட்டும் தலைசாய்த்தும் மனிதரைப் பணியும் வழக்கமும் இருந்து வந்தது. இறை வணக்கத்தின் போது கைகள் இணைந்தாலும் அது இந்தியத் துணைக் கண்டத்தின் வணக்கத்தினின்றும் வேறுபட்டது. யூத, இஸ்லாமிய மரபுகளில் வழிபாட்டின்போது கைகள் கூப்பப்படுவதில்லை. மாறாக விரித்துப் பிடிக்கப்படுகின்றன.

மனிதரை மனிதர் வணங்குவது என்பது நிலவுடைமைச் சமுதாயத்திலேயே தன் உச்ச நிலையை எட்டியது என்று ஊகிக்கிறேன். முதலாளியத்தின் வருகை மனித உறவுகளில் மேலோட்டமான சமத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது எனப் பல இடங்களிலும் காணுகிறோம். முதலாளிய சமுதாயத்தில் தனி மனித உறவுகளில் தெளிவாகவே அதை நாம் அடையாளங்காணுகிறோம். தொடுகை என்பது, மேலை நாட்டுச் சூழலில், உபசரிப்பின் இயல்பான ஒரு பகுதியாகப், பண்பாட்டுக்கு ஏற்றபடி, கை குலுக்குவது முதல் கன்னத்தில் முத்தமிடுவதும் நெஞ்சோடு தழுவுவதும் வரை வேறுபடலாம். இன்று இவ்வாறான உபசரிப்பு பால் வேறுபாடின்றிக் கடைப்பிடிக்கப்படுகிறது.

பெருநகரங்களைத் தவிர்த்தால் தென்னாசியச் சூழலில் தொடுதல் மிக நெருக்கமான உறவுள்ள இடங்கள் போகப் பொதுவாகவே தவர்க்கப்படுவது. எனவே கைகூப்பி வணக்கம் கூறுவது மிக வசதியாக உள்ளது. கைகள் எவ்வாறு கூப்பப்படுகின்றன என்பது ஒவ்வொரு பண்பாட்டிலும் மட்டுமன்றி, ஒவ்வொரு பண்பாட்டுக்குள்ளும் ஏற்றத் தாழ்வுகளை அடையாளப்படுத்துகிற முறையிலும் வேறுபடுகின்றது.

முதலாளியத்தின் எழுச்சி நிலவுடைமைச் சமுதாயத்தை அடையாளப்படுத்துகிற பண்பாட்டுக் கூறுகளை முற்றாக அழித்தொழித்து விடுவதில்லை. அல்லது போனால் பாராளுமன்றச் சனநாயகத்தின் தாயகமெனப்படுகிற பிரித் தானியாவில் இன்னமும் ஒரு அரசியும் அரசகுடும்பமும் பாராளுமன்றத்தில் ஒரு பிரபுக்கள் அவையும் இருக்க நியாயமில்லை. முதலாளியத்திற்கு ஊறில்லாமல் அமையக்கூடிய எந்த நிலவுடைமைச் சமுதாய நடைமுறையையும் முதலாளியம் வலிந்து அழிக்கப் போவதில்லை. அதிலும், வெளியிலிருந்து கொலனிய ஆட்சி முறையுடன் உட்புகுந்த ஒரு முதலாளிய முறை நிலவுடைமைச் சமுதாயத்தின் பலவேறு ஏற்றத்தாழ்வுகளை விட்டுவைக்கிறது என்பதை விட, அவற்றைத் தனக்குச் சாதகமாகவும் பயன்படுத்திக் கொள்கிறது. குறிப்பாகப் பண்பாட்டுத் தளத்தில் எசமானருக்குப் பணிவு, எசமான விசுவாசம் போன்ற நிலவுடைமைச் சமூகத்தின் சிந்தனைகள் சமூக நடத்தை மூலம் மேலும் வலியுறுத்தப்படுகின்றன.

அதேவேளை, கொலனிய சமுதாயத்தில் உருவாகி வலுப்பெற்று வருகிற ஒரு புதிய அதிகார வர்க்கம் நிலவுடைமைச் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளோடு ஒட்டிய மரபுகளைத் தனக்கு வசதியாகப் பயன்படுத்தத் தயங்குவதில்லை. எனவே வரலாற்று வழி வந்த சமூக மேலாதிக்கச் சிந்தனைகள் புதிய அதிகார அடுக்குக்களின் தேவைகட்கும் வசதிக்கும் அமையப் புனரமைக்கப்படுகின்றன. பல இடங்களில் வழக்கொழிந்து போன மரபுகள் மீளவும் வழக்குக்கு வரவழைக்கப்படுகின்றன. மரபு என்ற பேரில் புனைவுகள் நுழைகின்றதும் கவனத்திற்குரியது.

தமிழரின் அன்றாட வாழ்வில் மட்டுமன்றிப் பல தென்னாசிய சமூகங்களிலும் ஒருவரை ஒருவர் சந்திக்கிற போது சடங்காசாஃமாக வணக்கம் தெரிவிப்பது பொதுவான சமூக வழக்கல்ல. வீட்டிற்கு வருவோரை இன்ன முறையில்தான் வரவேற்க வேண்டும் என்ற கண்டிப்பான விதிமுறைகள் நமக்கு இல்லை என்றே நினைக்கிறேன். நடைமுறையில் முறுவலோ ஒரு சைகையோ வாருங்கள் என்ற சொல்லோ போதுமானது. சடங்காசாரமான வரவேற்புப் பொது இடங்கட்குரியது. "வணக்கம்" என்கிற சொல் தொலைபேசியில் "ஹலோ" என்பதற்கு மாற்றாகக்கூடப் பயன்பட்டு வருகிறது.

மனிதரை மனிதர் வணங்குவது என்பது நிச்சயமாக இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தில் பெருமளவும் இல்லாது போன ஒரு நடைமுறை. தமிழகத்தில் அது வளர்ச்சி பெற்றுள்ளது. குருகுலக் கல்வி முறையில் ஆசானைக் கடவுளாக (எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்றவாறு) மதிக்கிற அடிப்படையில் கடவுளை வழிபடுகிற போது காட்டுகிற பணிவுடன் வணங்குகிற மரபு இருந்து வந்திருக்கலாம். சிறப்பான குடும்ப நிகழ்வுகளின் போது பெற்றோரை வணங்கி ஆசி பெறுவது கூட அரிதாகி உள்ள சூழ்நிலையில், காலில் விழுந்து வணங்குகிற பழக்கம் ஒன்று நம்மிடையே புதிதாகப் புகுத்தப்பட்டு வருகிறது.

புலம்பெயர்ந்த நாடுகளில் நடக்கும் ஈழத்தமிழ் இந்துத் திருமணங்களில் மணமேடையில் மணமக்கள் பெற்றோரின் காலைத்தொட்டு அல்லது காலடியில் குனிந்து வணங்கி ஆசி பெறுவது மட்டுமன்றி மணப்பெண் மணமகனை விழுந்து கும்பிடுகிற ஒரு சடங்கும் புகுத்தப்பட்டுள்ளது. அது போக அரங்கேற்றங்களின் போது 'குரு' என அழைக்கப்படுகிற சங்கீத அல்லது நடன ஆசிரியரை விழுந்து கும்பிடுவதும் சில சமயங்களில் சிறப்பு விருந்தினர்களாக வருகிற பிரமுகர்களையும் பெற்றோரையும் விழுந்து கும்பிடுவதையும் வழக்கமாக்கி அது தமது பண்பாடு என்று பெருமைப்பட்டுக் கொள்ளுகின்றனர்.

அதை விடவும், காவி உடையணிந்த 'துறவி' மாரையும் விழுந்து கும்பிட்டு ஆசி பெறுகிற ஒரு பழக்கமும் பரவி வருகிறது. இதில் விநோதமென்னவென்றால் முற்றுந் துறந்து பந்த பாசமற்றுக் கடவுளுக்குத் தொண்டு செய்வதே தம் பணி என்று சொல்லிக் கொள்கிறவர்கள் தமது சமு தாயத்தில் உள்ள இந்துக்கள் தம்மைப் பணித்து வணங்கு மாறு அல்லது காலில் விழுந்து வணங்கவும் பாத பூசை செய்யவும் வேண்டுமென்று எதிர்பார்ப்பதாகும். இந்த வியாதி அரசியலில் உயர்நிலையில் உள்ளவர்களிடமும் சமுதாயத்தில் உள்ள பிரமுகர்களிடமும் தொற்றிக் கொண்டுள்ளது. தமிழகத்தில் பொதுக் கூட்ட மேடையில் அமைச்சர்கள் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் காலில் விழுந்து வணங்கியதை இங்குள்ளவர்கள் சிரிப்புக்குரிதாகவே கருதினர். அந்த அடிப்படையில் நோக்கினால் யாரும் ஏன் எந்தப் பெரியமனிதரையும் விழுந்து கும்பிட வேண்டும்? எவரும் இன்னொருவர் தன்னைக் காலில் விழுந்து வணங்குமாறு எதிர்பார்ப்பவராக இருப்பாராகில், அவர் எவரதும் மதிப்பிற்குரிய ஒருவராக இருக்க முடியாது என்பது எனது கருத்து.

தொடர்ச்சி 9ம் பக்கம்

---

### பயங்கரவாத தடைச்சட்டவிதிகள்

6ம் பக்க தொடர்ச்சி....

மேற்கூறப்பட்ட விளக்கமும் வியாக்கியானமும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மேலும் இறுக்க முடையதாக்குகின்றது. ஆனால் இங்கே ஆழ்ந்து கவனிக்க வேண்டியது யாதெனில் மேலே கூறப்பட்டவற்றில் பெரும் பகுதி அரசாங்கப் படைகளாலோ அன்றி அவர்களோடு நிற்பவர்களாலோ முன்னெடுக்கப்படும் போது அவை கணக்கில் கொள்ளப்படுவதில்லை. சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவரப்படுவதுமில்லை என்பது பகிரங்க இரகசியமாகும். இவை அனைத்தும் அரசாங்க எதிர்ப்பு நிலைப்பாடுடைய எவருக்கும் பொருந்தக் கூடியதாகும் என்பதே சாராம்சமாகும்.

இவ்விடத்திலே ஒரு விடயம் நினைவுபடுத்தப்பட்ட வேண்டியதொன்றாகும். ஆளும் வர்க்கத்தின் இதுபோன்ற பயங்கரச் சட்டங்கள் முழு நாட்டின் மக்களுக்குரியதொன்றேயாகும். 1979ல் தமிழ் மக்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் தேவைப்பட்ட வேளைகளில் சிங்கள மக்களுக்கு எதிராகவும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டது. வேலை நிறுத்தங்களை முறியடிக்கவும் வெகுஜன அரசியல் எழுச்சிகளை தடுத்து நிறுத்தவும் பயன் படுத்தப்பட்டது. இவற்றுக்கும் மேலாக 1988-89 கால கட்டத்தில் ஜே.வி. பி க்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் ஒரு பெரும் ரத்தக் குளிப்பும் காணாமல் போதலும் இடம்பெற்றன. அவற்றுக்கெல்லாம் இச் சட்டமே பயன்படுத்தப்பட்டது.

இத்தகைய பயங்கரவாதத் தடைச்சட்டமும் அதற்கான புதிய விதிகளும் வியாக்கியானங்களும் சர்வதேச மனித உரிமைகள் பற்றிய தரத்திற்கு உடன்பாடற்றவை என கட்சிகள் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. மேலும் இதன் மூலம் கீழ்வரும் அம்சங்கள் கண்காணிப்பிற்கும் தடைகளுக்கும் உள்ளாக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.


1. சிவில் சமூகம் உள்ளிட்ட அமைப்புகள் வேறுபட்ட அபிப்பிராயங்களை கொண்டிருப்பதையும் சட்டரீதியான ஜனநாயக நடவடிக்கைகள் மேற்கொள்வதையும் தடைசெய்தல்.
2. ஊடகங்கள், சிவில் அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புகள் என்பனவற்றின் மீது தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அளவுக்கு அதிகமான அதிகாரம் வழங்கியிருத்தல்.
3. ஜனாதிபதியால் நியமிக்கப்படும் மேன் முறையீட்டு அதிகார சபையின் அமைப்பும் சட்ட வலுவும் நீதித்துறைக்கும் நிர்வாகத் துறைக்குமிடையேயான அதிகாரப் பகிர்வு என்பது அரசியல் யாப்புக்கு முரணானதாகவும் மீறுவதாகவும் உள்ளமை.

இவ்வாறன தன்மைகளின் கீழ் இப் பயங்கரவாதத் தடைச்சட்டமும் அதன் விதிகளும் தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்களுக்கு எதிரானதாக முழு வீச்சில் முன்னெடுக்கப்படும் அபாயமே மீளவும் எழுந்துள்ளது. இங்கே தான் முதலாளித்துவ ஜனநாயக முக மூடிகள் யாவும் கழற்றி வீசப்பட்டு பாசிசப் பயணம் விரைவாக்கப்படுகிறதைக் காணமுடிகின்றது. இதனை முழு நாட்டு மக்களும் குறிப்பாக உழைக்கும் மக்கள் அனைவரும் தமிழ்- சிங்கள- முஸ்லீம்- மலையகத் தமிழ் என்ற குறுகிய வட்ட நிலைப்பாடுகளுக்கு அப்பால் எதிர்த்து நிற்க வேண்டும். சொத்து சுகம் சுரண்டல் கொண்ட உயர்வர்க்கமும் அதன் பிரதிநிதிகளான ஆளும் வர்க்கத்தினரும் அவர்களுடன் இணைந்து நிற்கும் ஏகாதிபத்திய சக்திகளும் ஒரு புறமாக உள்ளனர். மறுபுறத்தில் சுரண்டப்பட்டு அடக்கியொடுக்கப்படும் நிலையில் நாட்டின் ஏகப் பெரும்பான்மையான மக்கள் உள்ளனர். இந்த வர்க்கப் பிளவில் உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து போராடாத வரை இன மத மொழி பிரிவினைகளுக்குள் சிக்குண்டு ஒருவரை ஒருவர் நிராகரித்து நிற்கும் வரை நாட்டில் எவருக்குமே விமோசனமோ விடுதலையோ கிடைக்கமாட்டாது. மேன்மேலும் பயங்கரவாதத்தின் பெயரால் ஒருவர் பின் ஒருவராக ஒடுக்கப்படும் நிலையே நீடிக்கும் என்பதே உண்மையானதாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# கியூபாவின் 48 வது தேசிய தினம்



80 வயதையடைந்து நிற்கும் தோழர் ஃபிடல் காஸ்ரோ

கியூபா ஐக்கிய அமெரிக்காவின் மூக்கு நுனியின் கீழ் அமைந்திருக்கும் தீவு நாடாகும். ஸ்பானிய கொலனித்துவத்தின் கீழும் அதன் பின் அமெரிக்க பொம்மை ஆட்சிகளின் கீழும் இருந்து வந்த நாடாகும். ஹோசே மார்த்தி போன்ற கொலனிய எதிர்ப்பு தலைவர்களின் கீழ் கியூப மக்கள் தொடர்ந்து போராடி வந்திருக்கிறார்கள்.


அத்தகைய பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே ஃபிடல் காஸ்ரோ அவரது தம்பி ரால் காஸ்ரோ உள்ளிட்ட இளைஞர்கள் ஒன்று சேர்ந்து 1953 யூலை 26ல் மொன்கடா ராணுவத் தளத்தை தாக்கி புரட்சியைத் தொடங்கினர். ஆனால் அத்தாக்குதல் தோல்வி கண்டது. பலர் கொல்லப்பட்டனர். காஸ்ரோவும் அவர் தம்பி ரால் காஸ்ரோ உட்பட 9பேர் சிறைவைக்கப்பட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டனர். ஃபிடல் கஸ்ரோ நீதிமன்றத்தில் தானே தமக்காக வாதாடினார். அதில் ஏன் தாம் புரட்சியில் ஈடுபட்டதாகவும் கியூப மக்களை விடுதலை செய்யத் தாம் வகுத்ததிட்டங்களையும் தெளிவாகக் கூறினார். அதுவே 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' என்ற புகழ் பெற்ற நூலாக வெளிவந்தது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட காஸ்ரோவும் ஏனையோரும் மக்களின் கடும் எதிர்ப்புக் காரணமாக 1955ல் விடுதலை செய்யப்பட்டனர்.

மெக்சிக்கோ சென்ற காஸ்ரோவும் தலைமைக்குழுவினரும் அடுத்த கட்டப் புரட்சிக்குத் தயாரிப்பு செய்தனர். அங்கே தான் ஏனஸ்ட் சேகுவேரா இணைந்து கொண்டார். இவர்கள் தமது இயக்கத்திற்கு 'யூலை 26 இயக்கம்' எனப் பெயரிட்டனர். 1955ன் டிசம்பரில் மெக்சிக்கோவி லிருந்து கிரான்மா என்ற கப்பலில் கியூபாவின் சியாரா மெஸ்திரா மலைப்பகுதிக்கு வந்த சேர்ந்தனர். அங்கி ருந்து நாட்டில் மீண்டும் புரட்சிக்கான பன்முகத் தயாரிப்புகள் செய்யப்பட்டது. ஆயுதப் போராட்டத்தின் மூலம் அமெரிக்க கைப்பொம்மையான சர்வாதிகாரி பற்றிஸ்ராவின் ராணுவம் முறியடிக்கப்பட்டது. பற்றிஸ்ரா அமெரிக்காவிற்கு தப்பி ஓடி னான்.

1959 ஜனவரி 1ம் திகதி புரட்சி வெற்றி பெற்றது. ஃபிடல் காஸ்ரோ மிகுந்த நிதானம் மிக்க தூர நோக்குடன் கியூபக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்ச் புரட்சிகர இயக்கம், யூலை 26 இயக்கம் ஆகிய மூன்றரையும் ஒன்றிணைப்பதில் வெற்றி பெற்றார். ஒருங்கிணைந்த புரட்சிகர அமைப்பு உருவாக்கப்பட்டது. பல்வேறு சவால்கள் மத்தியில் சோஷலிசப் புரட்சிக்கான ஒருங்கிணைந்த கட்சி (USR) என முன்னைய அமைப்பு பெயர் மாற்றம் பெற்றது. அதன் பின் 1965ல் கட்சியின் பெயர் கியூபக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் பெயர் மாற்றம் பெற்றது. சோஷலிசத்தை கியூப மண்ணினின் தனித்துவம் விஷேட சூழல் என்பதற்கு ஏற்ப காஸ்ரோவின் தலைமையில் கட்சி முன்னெடுத்து வந்தது.

கியூபா தனது 48 வது தேசிய தினத்தை 2007 ஜனவரி முதலாம் திகதி நினைவு கூர்கின்றது. இத்தனை ஆண்டுகளை எண்பது வயதை அடைந்த பிடல் காஸ்ரோவும் கம்யூனிஸ்ட் கட்சியும் மிகப் பெரும் அச்சுறுத்தல்கள், இடர்கள் தடைகள் பின்னடைவுகள். கஷ்டங்கள் மத்தியிலேயே சோஸஷலிச வெற்றிகளாகப் பெற்று வந்திருக்கின்றார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதிகள் தடைகள் பயமுறுத்தல்களை எதிர்த்து கியூப மக்கள் தமது வீரம் செறிந்த நிலைப்பாட்டை காஸ்ரோ தலைமையில் உலக மக்களுக்கு காண்பித்து வந்துள்ளனர். இன்றைய உலகில் கியூபா ஒரு முன்னுதாரணம் மிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடாக நிமிர்ந்து நின்று வருகின்றது. அதன் அடிச்சுவட்டைப் பின்பற்றி வெனிசுலாவே பொலிவியா ஆர்ஷன் டீனா, பிரேசில் போன்ற நாடுகள் வழிநடக்க ஆரம்பித்துள்ளன.

ஆனால் அமெரிக்க கொள்கை வகுக்கும் ஏகாதிபத்தியக் கூட்டம் ஃபிடல் காஸ்ரோ எப்பொழுது இறந்து கொள்வார் என நாட்களை கணக்கிட்டு வருகின்றது. ஏனெனில் அவருக்குப் பின் கியூபாவைத் தனது கொலனியாக மாற்றிக் கொள்ளும் எண்ணத்துடனேயாகும். ஆனால் கியூப மக்களும் கியூப கம்யூனிஸ்ட் கட்சியும் காஸ்ரோவிற்குப் பின்பும் தொடர்ந்து தமது சோஷலிஷ அமைப்பைப் பாதுகாத்து ஏகாதிபத்திய எதிர்ப்பை உயர்த்தி முன்னெடுத்துச் செல்வதில் உறுதியாகவே இருந்து வருகின்றனர்.



ஏனஸ்ற் சேகுவாரா

# 'மனித நேயத்தின் அடிப்படையிலானவைத்தியம்'
## கியூபாவின் சுகாதாரத்துறை பற்றி இலங்கை டாக்டரின் கணிப்பு

கியூபாவில் முன்னெடுக்கப்பட்டு வருவது சோஷலிச அமைப்பு முறையாகும். அதனை அழித்தொழிக்கும் அமெரிக்க சதி முயற்சிகளுக்கும் பொருளாதா்ர தடைச் சாவல்களுக்கும் மத்தியில் கியூபா தனது சுயத்தைப் பாதுகாத்து முன்னெடுத்து வருகின்றது. அந்நாட்டின் சுகாதாரத்துறை மக்கள் நலன் நாட்ட நிலையில் உலகிற்கே முன் மாதிரியாக இருந்து வருகின்றது. கியூபாவின் சுகாதாரத்துறையின் விஞ்ஞான நிபுணர்கள், டாக்டர்கள், தாதிகள் மற்றும் பல நிலை ஊழியர்கள் எத்தகைய உயர்ந்த அர்ப்பணிப்புடனும் தியாக சிந்தனையுடனும் மக்களின் சுகாதார நல்வாழ்வுக்கு சேவை புரிந்து வருகிறார்கள் என்பதை அங்கு சென்று வருவோர் எடுத்துரைத்து வருகிறார்கள்.

அத்தகையவர்களில் ஒருவரான இலங்கையைச் சேர்ந்த டாக்டர் ஐ. கந்தையா கியூப சுகாதாரத்துறை பற்றிக் கூறிய சில கருத்துக்களை இங்கு தருகின்றோம். டாக்டர் கந்தையா 1985ம் ஆண்டு முதல் பிரித்தானிய தேசிய சுகாதார சேவையில் பணியாற்றி வருபவர். அவரது கணிப்பும் கருத்தும் இலங்கையில் நாளாந்தம் சீரழிந்து வரும் சுகாதாரத் துறையைப் பற்றி சிந்திக்க வைக்கிறது. அத்துடன் சுகாதாரத்துறையை உலக வங்கியின் கட்டளைக்கு இணங்க தனியார்மயப்படுத்தும் உள்நோக்கங்களும் திட்டங்களும் இருந்து வரும் சூழலில் பிரித்தானியாவில் கடைமை புரியும் ஒரு இலங்கை டாக்டரான கந்தையா தெரிவித்துள்ள கருத்துக்கள் நம்மவர்களின் கவனத்திற்கு அவசியமானதாகும்.

"கியூபாவின் முன்மாதிரியை எடுத்துக் கொண்டால் அது ஒருகோட்பாட்டின் ஊடாக அமைந்த ஒன்றாகும். அது சோஷலிச அடிப்படை கொண்ட அந்த நாட்டின் அமைப்பில் வேலை செய்யும் சகல டாக்டர்களும் புரட்சியாளர் போன்றுள்ளனர். அவர்கள் மக்களின் வாழ்வில் ஒரு மாற்றத்தை குறிப்பாக சாதாரண மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றனர். மூன்றாம் உலகில் ஒரு வறிய நாடாகவிருக்கும் கியூபாவில் ஒரு முதற்தர வைத்திய சேவையுண்டு என்பது பிரமிக்கத்தக்கதாகும்"

எனக் கூறும் டாக்டர் கந்தையா கியூபாவிலிருந்து நாம் பாடத்தைப் படிக்கவும் படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளவும் வேண்டுமென்று கூறுகிறார். "கட்டுக்கட்டாகப் பணம் இருந்தால் மட்டுந் தான் ஒரு முதற்தர வைத்திய சேவையை ஏற்படுத்த முடியும் என்பது தவறானதாகும். சேவை என்பது நேர்மையுடையதாய் உண்மையானதாய் இருத்தல் வேண்டும். மக்களின் நலன்கள் மீதான அக்கறையால் உந்தப்பட்டவராய் இருந்தல் வேண்டும். அதனடிப்படையில் கியூபாவில் வாழ்வுக்கான எதிர்பார்க்கை காலம் 76-80 ஆண்டுகளாய் இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்று கூறுகிறார். அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த டாக்டர்க கந்தையா ஒரு முக்கிய புள்ளி விபரத்தையும் வெளியிட்டிருந்தார்.

"அமெரிக்காவின் வாஷிங்டன் டீ.சி யிலும் பார்க்க சிசு மரணம் கியூபா வில் பல மடங்கு குறைவாக இருக் கின்றது என்பதே அத்தகவலாகும்.

மேலும் கூறுகையில் "வாழ்க்கையில் மூன்று விடயங்கள் முக்கியமானதெனக் கியூப நாட்டவர்கள் கருதுகின்றனர். அவையாவன சுகாதாரம், கல்வி, விளையாட்டு என்பனவாகும். 1961ல் கல்வியறிவுள்ள மக்கள் எல்லைப்புறப் பகுதிக்குச் சென்று விவசாயிகளுக்கு கல்வி புகட்டி அவர்களின் கல்வியறிவை மேம்படுத்தினர். இது தொடர்ந்து இடம் பெற்ற தொன்றாகும்.

இலங்கையில் மருத்துவ கவனயீனம், நினைக்க முடியாத மருத்துவச் செலவு, மருந்துகளின் அதிகரித்த விலை, மருத்துவ சேவைக்கான பெருமளவு செலவு தொடர்பாக பத்திரிகைகளிற் பார்த்தேன்" என்றும் கூறும் அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில் "கியூபா நாட்டவர் ஒரு பழைய மாதிரியைப் பின்பற்றுகின்றனர். இதை தொடக்கிவைத்தவர்கள் இருவர் ஒருவர் சட்டத்தரணியான ஃபிடல் காஸ்ரோ. மற்றவர் டாக்டரான சே குவோரா. புரட்சிகரப் போராட்டகாலத்தின் போது இராணுவத்தால் தாக்கப்பட்ட இவர்கள் சியேரா மாயெஸ்ரோ மலைகளைச் சென்றடைந்தனர். காடுகளில் இருந்த போது கள வைத்திய சாலைகளை நிறுவி விவசாயிகளுக்கு வைத்தியம் செய்தனர். 1959ல் இவை மாதிரி வைத்திய சாலைகளாயின. சட்டத்தரணியும், டாக்டரும் விவசாயிகளும் ஒரேமாதிரியான மருத்துவ வசதிகளைப் பெற்றனர். இந்தமாதிரியே இன்று கியூபாவின் நடைமுறையில் சகலருக்குமான சமத்துவ மருத்துவ வசதியை எல்லோரும் பெறுகின்றனர்." "பிடல் கஸ்ரோவினால் உருவாக்கப்பட்ட தென் அமெரிக்க மருத்துவ கல்லூரி கியூபாவில் உள்ளது. வறியநாடுகளில் இருந்து மாணவர்களை கொண்டுவந்து படிப்பிக்கிறார்கள். "இது தன்னை வியப்புக்குள்ளாக்கியதில் ஆச்சரியமில்லை" என்கிறார் டாக்டர் கந்தையா.

"பெரு, நிக்கராகுவா, கௌத்தமாலா, நைஜீரியா போன்ற நாட்டு மாணவர்கள் இக்கல்லூரியில் கற்று வருகின்றனர். இந்தக் கல்லூரிக்கு கற்கவரும் மாணவர்கள் ஒரு உறுதிமொழி கூற வேண்டும். கல்வியை முடித்து நாடு திரும்பியதும் அவர்கள் தத்தம் நாட்டில் குறைந்தது இரண்டு வருடங்களாவது வறிய மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதாகும்."

"கியூபாவில் பணம் சம்பாதிக்கும் பாரிய மருந்தாக்கற் கம்பனிகள் எதுவும் இல்லை. பெரும்பாலான மருந்துகளை இயற்கை மூலப் பொருளைக் கொண்டே சுயமாகத் தயாரிக்கிறார்கள். உணவு சுகாதாரத்திற்கு அமைவாய் இருக்க வேண்டுமென்பதில் கியூபா உறுதியுடன் செயற்படுகிறது. உணவு விலைகள் மிகவும் குறைவானது. பறாடோறோஸ் எனப்படும் சாப்பாட்டுக்கடைகளில் சத்துள்ள உணவு வகைகளே பரிமாறப்படுகிறது."



"உடல்நலக்குறைவும் நோயும் ஒரு மனித அவலம் என நம்பும் கியூபர் கள் அத்தகைய அவலத்தை பணத் தினால் மட்டும் மாற்றி விட முடி யாது. உரிய நேரத்தில் சரியான மருத்துவமும் கவனிப்பும் வாழ்க் கையின் நோய்த்துன்பத்தை அனுபவிப்பவர்களுக்கு வழங்க வேண்டும். அதற்கு சேவை மனப்பான்மை இருக்க வேண்டும். அதனை கியூபாவில் காண முடிகிறது."

"அன்று கியூப புரட்சியில் முக்கியமான ஒருவராக நின்று போராடி பின் அமைச்சராகச் சில காலம் பதவி வகித்தவரான சே குவேராவின் மகள் இப்போது கியூபாவில் சிறுவர்களுக்கான வைத்திய நிபுணராகப் பணி புரிந்து வருகிறார். அவரது வைத்திய சேவை எவ்வித விளம்பரமும் அற்ற மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டிக்கின்றது" என்பதையும் டாக்டர் கந்தையா குறிப்பிட்டிருந்தார்.

நன்றி :சணடே லீடர்

தொகுப்பு: சிறி

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# சுனாமிப் பேரழிவு

## புகையிரத விபத்து விசாரணையை வெளியிட மறுப்பது ஏன்?

சுனாமியினால் ஏற்பட்ட பெரேலிய புகையிரத விபத்து பற்றிய விசாரணை அறிக்கையை வெளியிடும்படி வற்புறுத்தி கொழும்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. பெரேலிய புகையிரத விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஒன்றியம் அச்சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி காலையில் கொழும்பிலிருந்து மாத்தறைக்கு சென்ற புகையிரதம் தெல்வத்தை பெரேலிய எனுமிடத்தில் சுனாமிப் பேரலையால் தாக்கப்பட்டது. அதனால் அதில் பயணம் செய்த 2000 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என்று அறிக்கைகள் தெரிவித்தன. இலங்கை அரசாங்கமும், புகையித திணைக்களமும் உரிய முன்னே ற்பாட்டை செய்திருந்தால் அவ் விபத்திலிருந்து பயணிகளை காப்பாற்றி இருக்க முடியும்.


அவ்விபத்தில் தனது மனைவியையும் மனைவியின் தாயாரையும் இழந்த பிரியந்த பெரேரா என்பவர் இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் பயணிகளின் உயிரை பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து இலங்கை புகையிரத திணைக்களமும் அரசாங்கமும் பொலிஸ் திணைக்களமும் தவறிவிட்டன என்றும் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவகாசம் இருந்தபோதும் அவற்றை எடுக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டி அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

அதனை விசாரித்த உயர்நீதிமன்றம் "அவ்வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் போதாது என்றும் சுனாமி பேரலை பற்றி விசாரிப்பதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வெளியிடும் அறிக்கையில் விபரங்கள் இருப்பின் அவற்றை அடிப்படையாகக் கொண்டு பிரியந்த பெரேரா மீண்டும் புதிய மனுவொன்றை தாக்கல் செய்யலாம் என்றும் கூறியது.

அத்தீர்ப்பின் படி பிரியந்த பெரேரா சுனாமி ஆனைக்குழுவில் சாட்சியமளிக்க சென்ற போது அவ் விசாரணைக்குழு சுனாமி எவ்வாறு ஏற்பட்டது என்றும் அதனால் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றியும், மட்டுமே ஆராயும் என்றும் கூறி புகையிரத விபத்து பற்றி போக்குவரத்து அமைச்சர் விசாரணைக்குழுவொன்றை நியமிக்கும் என்று கூறி அவரது சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அதன் பிறகு பெரேலிய புகையிரத விபத்து பற்றி விசாரிக்கவென போக்குவரத்து அமைச்சு அமைத்திருந்த விசாரணைக் குழுவின் முன்னிலையில் பிரியந்த பெரேரா சாட்சியமளித்தார்.

அவ்விசாரணைகள் முடிவடைந்து ஒரு வருடத்திற்கு மேலாகிறது விசாரணை அறிக்கை போக்குவரத்து அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளபோதும் அவ்வறிக்கை இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் ஒரு அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்யலாம் என்று எண்ணியிருந்த பிரியந்த பெரேராவின் எண்ணமும் நிறைவேறவில்லை. அவரின் சார்பில் போக்குவரத்து அமைச்சருக்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தபோதும் அதற்குப் பதிலளிக்கப்படவில்லை.





அவ்வறிக்கையின் படி புகையிரத திணைக்களம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத்தவறிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. ஆனால் உத்தியோகபூர்வமாக விசாரணை அறிக்கையை வெளியிடப்படாதிருப்பதற்கு காரணம் என்னவென்று ஊடகவியலாளர் ஒருவர் அண்மையில் வினவியபோது அதைவிட வேறு முக்கிய விடயங்கள் இருப்பதாக போக்குவரத்து அமைச்சர் கூறியதாக சொல்லப்படுகின்றது. அவர் அவ்வாறு கூறியிருந்தால் அவரது "பொறுப்பை" உணர்ந்து கொள்ள முடியும்.

இதைத்தவிர வடக்கு கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. சுனாமி மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட 'சுனாமி கட்டமைப்பு' உயர்நீதிமன்ற தீர்ப்பை அடுத்து முடக்கப்பட்டது. ஜே. வி. பி ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் 'சுனாமி கட்டமைப்பு' அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக வழக்கு தாக்கல் செய்திருந்தனர். அவ்வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் 'சுனாமி கட்டமைப்பை' இயங்கவிடாது இடைக்கால தடையுத்தரவை வழங்கியிருந்தது.

இவ்வாறு சுனாமி நிவராணங்கள், மீளமைப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளாத நிலையில் இரண்டு வருடங்கள் முடிவடைந்து விட்டன. அரசாங்கம் சுனாமியின் பேரால் கிடைத்த வெளிநாடுகளின் உதவிகளில் மட்டுமே கவனம் செலுத்தியது.

அதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குகிழக்கு தெற்குமேற்கு மக்கள் அவர்களது வேதனைகளிலும் பாதிப்புகளில் இருந்து இன்னும் மீளவில்லை. வீடுகள் இருப்பிடங்கள் தொழில் கல்வி சுகாதாரம் போன்ற இழப்புகளில் இருந்து மீளவே இல்லை. அத்தகையோர் சாதாரண உழைக்கும் மக்களேயாவர். அவர்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் வகையில் சுவரொட்டிகளை ஒட்டிய பெரேலிய புகையிரத விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஒன்றியம் 2006 டிசம்பர் 26 ஆம் திகதி விபத்து நடைபெற்ற இடத்தில் விபத்தினால் உரிழந்தவர்களின் நினைவாக நினைவஞ்சலி நிகழ்ச்சியொன்றை நடத்தியது.

மற்றும்படி அரசாங்கம் அரச சார்பற்ற நிறுவனங்கள் சுனாமிப் பேரழிவிற்காக இரண்டாவது ஆண்டு நினைவிற்காக கண்ணீர் வடிப்பது போலித்தனமானதும் ஏமாற்றுமாகும்.

---

**காட்டடி கொடுத்த**

**1ம் பக்க தொடர்ச்சி......**

ஏற்றுக் கொள்ளாதபடியால் போராட்டத்தில் ஈடுபடுகின்ற மக்களே அடுத்த கட்டத்தை தீர்மானிக்கவேண்டுமென ம. ம. மு தலைவரும் அமைச்சருமான பெ. சந்திரசேகரம் தெரிவித்தார்.

இத் தெரிவிப்பு இ. தொ. கா அதனது பேச்சுவார்தையைத் தொடர்ந்து புதிய கூட்டு ஒப்பந்தத்தை செய்வதற்கு அறிவிப்பானது. அத்துடன் இ. தொ. கா பேச்சுவார்த்தை நடாத்தி இணங்கிக் கொண்ட ரூபா 170 அடிப்படை சம்பளம் என்பதை வரவேற்பதாகவும் அறிவித்தார். அதன் மூலம் வேலை நிறத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டே அதனை ம. ம. மு காட்டிக் கொடுத்தது.

வேலை நிறுத்தப்போராட்டத்திற்கு ஆதரவளித்த இ. ஐ. தொ. மு, தொ. தே. சங்கம் என்பன பின்னர் ஜே. வி. பி தொழிற்சங்கத்துடன் இணைந்து போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக கூறினாலும் கூட்டு ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட சங்கங்கள் ரூபா 170 அடிப்படை சம்பளத்திற்கு இணங்கி கைச்சாத்திட்டப்பிறகு இ. ஐ. தொ. மு, தொ. தே. சங்கம் வெறுமனே எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு சும்மா இருக்கின்றன.

தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தலைமைகளின் வழிகாட்டல்கள் எதுவுமின்றி அவர்களின் நியாயமான சம்பள உயர்விற்காக பல விதமான போராட்டங்களை முன்னெடுத்தனர். மெதுவான வேலை செய்யும் போராட்டம், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், வேலை நிறுத்தப் போராட்டம் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தனர். தொழிற்சங்கத் தலைவர்கள் கேட்டுக் கொண்டபோதும் அவர்கள் போராட்டங்களை கைவிடவில்லை. போராட்டங்களை கைவிடக்கோரிய தொழிற்சங்கத் தலைவர்களின் கொடும்பாவிகளை எரித்தனர்.

ஒரு மாதத்திற்கு மேல் வீரமிக்க போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களின் கருத்தை கேட்காமலேயே இ. தொ. கா, இ. தே. தோ. தொ. சங்கம், பெ. தொ. கூட்டுக்கமிட்டி என்பன 170 ரூபா அடிப்படை நாட் சம்பளத்திற்கு இணக்கம் தெரிவித்து கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. இதனை ம. ம. முயும் ஏற்றுக்கொண்டது.

அடிப்படை சம்பளம் ரூபா 170 உடன் மொத்த சம்பளம் ரூபா 260 என்று கூறப்பட்டாலும் எல்லா மாதங்களிலும் அனைத்து தொழிலாளர்களிலும் உயர்ந்தபட்ச சம்பளமான 260 ரூபா கிடைக்கப்போவதில்லை. ரூபா 300/= அடிப்படை சம்பளமாக கேட்டுப் போராடிய தோட்டத்தொழிலார்களுக்கு பெரும் ஏமாற்றமாகும். வேலை நிறுத்தப் போராட்டத்தை இன்னும் ஒரு சில நாட்களுக்கு தொடந்திருந்தால். தோட்டக்கம்பெனிகள் இணக்கத்திற்கு வந்திருக்கும். அதற்கிடையில் அரசாங்கமும், தொழிற்சங்கங்களும் தோட்டக்கம்பெனிகளுக்கு உதவும் வகையிலேயே போராட்டத்தை அப்பட்டமாக காட்டிக் கொடுத்தன.

தொழிலாளர்களின் உறுதி இருந்தபோதும் போராட்டம் திட்டமிட்ட வேலைத்திட்டமொன்றை கொண்டதாக உறுதியான தலைமைத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டதாக இல்லாதபடியாலேயே காட்டிக்கொடுக்கப்பட்டது. சம்பளஉயர் போராட்டங்கள் வழமையாக இவ்வாறே காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இம்முறை தொழிலாளர்கள் தன்னெழுந்தவாரியாக முன்னெடுத்தப்போதும் இறுதியில் காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் போராட்டத்தில் பாரம்பரிய தொழிற்சங்கத் தலைமைகளுக்கு எதிராக கருத்துக்கள் வெளிப்பட்ட அளவிற்கு அத்தலைமைகளை அரங்கிலிருந்து அகற்றுவதற்கான அரசியல் விளக்க விருப்பம் வெளிப்படவில்லை. அத் தலைமைகள் போராட்டத்தை அப்பட்டமாக காட்டிக் கொடுத்தப் பிறகும் கூட அவற்றை முற்றாக நிராகரித்து மாற்றுத் தலைமைகளைக் பலப்படுத்தும் இடத்திற்கு தொழிலாளர்கள் இன்னும் வந்து சேரவில்லை.

பாட்டாளி வர்க்க புதிய- ஜனநாயக சங்கம் சுதந்திரமான ஒரு அணுகு முறையுடனேயே நியாயமான சம்பள உயர்விற்குரிய போராட்டத்தில் பங்கெடுத்தது. இந்தப் போராட்டத்தினூடாக மாற்று புரட்சிகர தொழிற்சங்க இயக்கத்திற்கான தேவையை வலியுறுத்தி நடவடிக்கைகளில் இறங்கி இருந்தது. போராட்டத்தில் மலையக தொழிற்சங்கத் தலைமைகளின் வரையறையை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தியதுடன் மாற்றுத் தலைமையை கட்டுவதற்கான அவசியத்தையும் வற்புறுத்தி செயற்பட்டது.

இப்போராடத்தில் பெற்ற பட்டறிவை அனுபமாகக் கொண்டு பிற்போக்கு ஆதிக்க தொழிற்சங்க தலைமைகளை நிராகரித்து மாற்றுத் தொழிற்சங்க தலைமையைக் கட்டி வளர்க்க மலையகத் தொழிற்சங்க தலைமையைக கட்டிவளர்க்க மலையகத் தொழிலாளி வர்க்கம் முன்வரல் வேண்டும்.

---

காலில் விழுந்து வணங்குதல்

7ம் பக்க தொடர்ச்சி

மனிதர் பிறப்பால் சமமானவர்கள் என்பதுடன் சமுதாயத்திலும் சமமான உரிமையுடையோரென்பதை முதலாளியமும் ஏற்கிறது. நாம் நிச்சயமாக நிலப்பிரபுத்துவ சமூகத்தை நோக்கிப் போகவில்லை. எனவே நமக்கு நிலப்பிரபுத்துவ ஏற்றத்தாழ்வுகளைக் குறிக்கிற விதமான மரியாதைகள் தேவையில்லை. நாம் உண்மையாகவே மதிக்கிற ஒருவரை அவ்வாறு வணங்குவது நமது சுயமரியாதைக்கு மட்டுமன்றி நம்மதிப்புக்குரியவரது சுயமரியாதைக்கும் இழுக்காக அமையலாம் என்பதை நாம் நினைவிலிருத்துவது நல்லது.

நமது சமூக உறவுகள் குரு- சீடன், நிலப்பிரபு- பண்ணையாள் என்ற வரையறைகளை எப்போதோ மீறி விட்டன. மனைவியோ குழந்தைகளோ ஒரு ஆணின் சொத்துக்களோ அடிமைகளோ அல்ல. போலியான ஏற்றத்தாழ்வுகளைப் பேணும் சடங்குகள் ஆரோக்கியமான மனித உறவுக்குப் பொருந்தாதவை. அதிலும் வழக்கொழிந்து போன சடங்குத்தனமான செயல்களைப் புதுப்பிப்பது மூர்க்கத்தனமானது. ஏனெனில் நமது வாழ்க்கைமுறை சமதரும சமுதாயத்தை நோக்கியதாக அமையாவிட்டாலும் மனிதரை மனிதர் வழிபடுகிற ஒரு நிலையை நோக்கியதாக இல்லை என நினைக்கிறேன்.

மனிதரை மனிதர் சமமாக மதிப்பது சுயமரியாதையின் பாற்பட்டது. எவரும் மனித சமூகத்துக்கு ஆற்றிய சேவைகட்காகவும் சக மனிதருக்கு நல்லவராக இருந்தற்காகவும் மதிக்கப்படுவதும் சமூகத்திற்கும் சக மனிதருக்கும் தீமை செய்ததற்காக மதிப்பை இழப்பதும் நீதியின்பாற்பட்டது. அங்கு காட்டப்படுகிற மரியாதை வேறுபாடுகளுங் கூட, மனித சமத்துவத்தையும் சுயமரியாதையையும் மறுக்காத விதமாக அமைய வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

## பாஸ்க் மக்களின் படிப்பினை

ஸ்பெயின் பாஸ்க் பிரதேசத்தில் மீண்டும் வன் முறைகள் தலையெடுக்க ஆரம்பித்திருக்கின்றன. இதுஸ் பெயின் பாஸ்க் மக்களின் போராட்டத்தின் தொடர்ச்சியாகவே காணப்பட வேண்டியது. மிக நீண்ட காலமாக பாஸ்க் மக்களின் உரிமைக்காக போராடிவந்த ஈட்டா (ETA) அமைப்பு கடந்த மார்ச்சில் தங்கள் வன்முறைகளை முற்றாக கைவிடுவதாக அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து பல ஈட்டா ஆதரவாளர்கள் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டதுடன் பாஸ்க் மக்கள் தொடர்ந்தும் அடிமைப்படுத்தப்பட்டு வந்துள்ளனர். ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஈட்டா அமைப்பு அரசு பிரச்சி னையை தீர்க்க முயலாது இழுத்தடிக்கிறது என்றும் குற்றம் சாட்டி வருகின்றார்கள்.

உரிமைகள் கிடைக்காத போது போராடுவதை தவிர வேறு என்ன வழி?

## மக்டொனால்ஸ் பற்றி

மக்டொனால்ஸ், KFC, பிசா பிரியர்களுக்கு இந்தச் செய்தி கொஞ்சம் சலனத்தை தரலாம். ஓர் அமெரிக்கர் மக்டொனால்ஸ் உணவகத்திற்கு எதிராக 1.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை நட்டஈடாக கேட்டு வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அவர் மக்டொனால்ஸ் உணவகத்தில் வாங்கிய உணவ ஒன்றில் இறந்த எலி ஒன்று இருந்ததை காரணம் காட்டியே அவர் வழக்கு தொடர்ந்துள்ளார். அவர் வாங்கிய உணவில் இறந்த எலி ஒன்று வாயைத் திறந்த படி பொரிந்த நிலையில் இருந்துள்ளது.

ஏகாதிபத்தியம் கோலோச்சும் போது உணவில் எலி என்ன என்னென்னவோ எல்லாம் இருக்கும்.

## இதோ ஒரு புள்ளிவிபரம்

ஐ. நாவின் உணவ நிறுவனத்தின் (FAO) புதிய புள்ளி விபரங்கள் உலகில் 854 மில்லியன் மக்கள் போசாக்கு குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கின்றது. 1996 இல் நடைபெற்ற உணவு உச்சி மாநாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் போசாக்கு குறைவால் பாதிக்கப்பட்டோரது எண்ணிக்கையை அரை மடங்காக குறைப்பது (412 மில்லியன்) என்று தீர்மா னிக்கப்பட்டது. ஆனால் 10 ஆண்டுகள் கடந்த நிலையில் எண் ணிக்கை 30 மில்லியன்களால் அதிகரித்து நிற்கிறது. கோளமயப் புதிய உலக ஒழுங்கில் இவை ஒன்றும் அதிகமான புள்ளி விபரம் இல்லைத் தான்

## அமெரிக்க திமிர்

வெனசுவேலாவில் நாடாளுமன்ற நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அங்கு வருகைதந்த அமெரிக்க தூதுவர் தன்னை நாடாளுமன்றத்துக்குள் அனுமதிக்குமாறு கேட்டு பெரிய களேபரமே செய்திருக்கிறார். நாடாளுமன்ற ஒழுங்குமுறைகளை மீறியதையும் முன் அனுமதி இன்றி நாடாளுமன்றத்திற்கு வந்ததையும் காரணம் காட்டி அதிகாரிகள் அவரை அனுமதிக்க மறுத்து வெளியேற்றி விட்டார்கள். இது பற்றி கருத்து தெரிவித்த வெனிசுலாவிலுள்ள அமெரிக்க தூதரகம் "நாடாளுமன்றத்தில் என்ன நடக்கிறது எனப் பார்க்கும் ஆவலிலேயே எமது தூதர் அங்கு சென்றார் என்று சொல்லியது". உலகையே தாங்கள் ஆழ்வதாக கனவு காண்பதால் இவை யெல்லாம் சாதாரணம்

## ஐ. நா.வின் தடை

ஈரான் மீது ஐ. நா. பாதுகாப்புச் சபை பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்துள்ளது. காரணம் ஈரான் நாடு தனது ஆக்க அபிவிருத்தித் தேவைக்கான அணு சக்தி உற்பத்தியில் ஈடுபட்டு வருவதை கைவிடச் செய்வதற்கே யாகும். அமெரிக்கா முன்னின்று கொண்டு வந்துள்ள இத் தீர்மானத்திற்கு அணு ஆயுதங்களை வைத்துள்ள பாதுகாப்புச் சபை நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. அமெரிக்காவின் தீர்மானத்தை தடுத்து வீட்டோ செய்வதற்கு ரஷியாவோ சீனாவோ முன்வரவில்லை. நான் வைத்திருந்தால் சரியானது. அதே பொருளை நீ வைத்திருந்தால் அபாயகரமானது. இது தான் அமெரிக்காவின் நீதி அதற்கு ஆதரவ தெரிவிக்கிறது. ஐ. நா. சபை ஐக்கிய நாடுகள் சபை இப்போது ஐக்கிய அமெரிக்காவின் சபையேயாகும்.

# 'வெடிகுண்டுகளால் ஆயுதங்களால் கட்டமைக்கப்படுகிற ஜனநாயகம்'

## ஐ.நா சபையில் ஹியூகோ சாவேஸ் உரை

உலக நாடுகளை ஆளும் அரசாங்கங்களின் பிரதிநிதிகளே எல்லோருக்கும் என் காலை வணக்கம். முதலில் நான் உங்களை மிகுந்த அன்புடன் அமெரிக்காவிலிருந்து எழுதுகிற ஒருவரான நோம் சோம் ஸ்கி எழுதிய இந்தப் புத்தகத்தை வாசித்துப் பார்க்க வேண்டுகிறேன். இது "மேலாதிக்கம் அல்லது அஞ்சி வாழ்தல்" என்ற தலைப்பையுடையது. இது ஒரு அற்புதமான புத்தகம். இந்தப் புத்தகம் 20ம் நூற்றாண்டிலும், இப்போதும் இந்த உலகில் என்னவெல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. நம் பூமிக் கோளத்தைக் சூழ்ந்துள்ள ஆபத்தை விளக்குகிறது.

அமெரிக்காவின் மேலாதிக்க வெறி, இந்த பூமியில் மனித, இனம் அழிந்து போகச் செய்யும் ஆபத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. இப்பேராபத்து குறித்து அமெரிக்க மக்களுக்கும், உலக மக்களுக்கும் தொடர்ந்து எச்சரிக்கை செய்கிறோம். இதை நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும். இந்தப் புத்தகத்திலிருந்து பல பக்கங்களை இங்கு வாசிக்க எண்ணிருந்தேன். ஆனால் நேரமின்மையால் நீங்கள் இந்நூலைப் படிக்க வேண்டும்.

இந்நூலை முதலில் படிக்கும் படி நம் அமெரிக்க சகோதர, சகோதரிகளை நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், ஆபத்து அவர்களின் வீட்டுக்குள்ளேயே இருக்கிறது. பேய் உங்கள் வீட்டிலேயே உள்ளது. அது நேற்று இங்கு வந்தது சென்றது. அதனால்தான் இன்று வரை இந்த இடத்தில் கந்தக நெடில் வீசிக்கொண்டிருக்கிறது.

சகோதர- சகோதரிகளே! நேற்று இந்த மேடையிலிருந்து அமெரிக்க அதிபர் நான் பேய் என்றழைக்கும் அந்த மேன்மை தங்கியவர் இங்கு வந்தார். இந்த உலகத்தின் முதலாளி போல் அவர் பேசிக் கொண்டிருந்தார். இந்த உலகத்தையே சொந்தமாக வாங்கி விட்டவர் போல் பேசிக் கொண்டிருந்தார். ஒரு மனநல மருத்துவரை அழைத்து அமெரிக்க அதிபர் நேற்று இங்கு விடுத்த அறிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஏகாதிபத்தியத்தின் செய்தித் தொடர்பாளரைப் போல் அவர் பேசினார். உலகில் உள்ள மக்கள் மீதான மேலாதிக்கம், சுரண்டல், கொள்ளை என இவற்றின் செயல் வடிவங்களைத் தொடர்ந்து நீடிப்பதற்கான அருமருந்துகளுடன் அவர் இங்கு வந்தார்.

சோம்ஸ்கி மிகச் சரியாகச் சொல்வதைப் போல அமெரிக்கா தனது மேலாதிக்க வெறியை நிலைநாட்டுவதற்குப் பல்வேறு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதை நம்மால் அனுமதிக்க முடியாது. உலக சர்வாதிகாரம் ஒருங்கிணைவதை அனுமதிக்க முடியாது. உலகையே ஜனநாயகப்படுத்தப் போவதாக அவர்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய ஜனநாயகம் எத்தகையது? மேட்டுக்குடியினரின் போலி ஜனநாயகம். வேறு வகையில் சொன்னால் வெடிகுண்டுகளாலும், ஆயுதங்களாலும் கட்டமைக்கப்படுகிற ஜனநாயகம். என்ன விசித்திரமான ஜனநாயகம் இது!

அமெரிக்க அதிபர் நேற்று நம்மிடம் இதே இடத்தில் இதே மண்டபத்தில் சொன்னார் "எங்கு வேண்டுமானாலும் பாருங்கள், தீவிரவாதிகள் வழிகாட்டுகிறார்கள்- ஏழ்மையிலிருந்து விடுபட்டுத் தப்பிப்பதற்கான ஒரே வழி வன்முறை, ஆயுதம், தியாகம்" என்று கூறுகிறார்கள் என்றார்.

அவர் எங்கு பார்த்தாலும் அவருக்கு தீவிரவாதிகள் மட்டுமே தெரிகிறார்கள். அவர் உங்கள் நிறத்தைப் பார்த்தவுடன் அய்யோ இவர் தீவிரவாதி எனக் கூப்பாடு போடுகிறார். ஈவோ மொராலஸ், பொலிவியாவின் மேன்மை தங்கிய அதிபர் இவரைப் பார்த்தால் அவருக்குத் தீவிரவாதி போல் தெரிகிறது. ஏகாதிபத்தியவாதிகளுக்கு காணுமிடங்களெல்லாம் தீவிரவாதிகள் தெரிகிறார்கள்.

ஆனால் அமெரிக்க அரசாங்கம் அமைதியை விரும்பவில்லை. அரசாங்கத்திற்கு போர்களின் மூலம் தன் சுரண்டலை செல்வாக்கை மேலாதிக்கத்தைச் செலுத்துவதிலேயே நாட்டம் உள்ளது. அமைதி வேண்டுமாம்!

ஆனால், ஈராக்கில் என்ன நடக்கிறது? லெபனானில் என்ன நடக்கிறது? பாலஸ்தீனத்தில் என்ன நிகழ்கிறது? கடந்த நூறு ஆண்டுகளாக இலத்தீன் அமெரிக்க நாடுகளில், உலகின் பிற நாடுகளில் என்ன நடக்கிறது? இது தவிர இப்போது புதிய மிரட்டல்கள் வேறு. வெனிசுவேலா மிரட்டப்படுகிறது. ஈரான் மிரட்டப்படுகிறது.

நண்பர்களே! கடந்த ஆண்டும் இதே இடத்தில் சந்தித்தோம். கடந்த எட்டு ஆண்டுகளாக இதைத்



உலகம் விழித்துவிட்டது. உலகத்து மக்கள் எழுச்சி பெற்று தங்கள் குரலைப் பதிவு செய்கிறார்கள். எனக்கு அழுத்தமாகத் தோன்றுகிறது- அன்புலகின் சர்வாதிகாரியே! உன் வாழ்நாளின் மீதப் பகுதியை பகல் கனவு கண்டு கழிக்கப் போகிறாய். ஏனெனில் நாங்கள் எல்லாம் விழித்துக் கொண்டோம். எல்லோரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, சமத்துவத்திற்காக, சுய கௌரவத்திற்காக, தேசங்களின் இறையாண்மைக்காக் குரல் கொடுக்கத் தொடங்கி விட்டார்கள்.

பின்பு அமெரிக்க அதிபர் கூறினார். "நான் மத்திய கிழக்கின் மக்களோடு நேரடியாக உரையாட இங்கு வந்தேன். அவர்களிடம் நான் சொல்ல விரும்புகிறேன். எங்கள் தேசம் அமைதியை விரும்புகிறது."

அது உண்மைதான்.

நீங்கள் நியூயோர்க், வாஷிங்டன், சான்பிரான்சிஸ்கோ என எந்த நகரத்து வீதிகளில் நிற்கும் அமெரிக்க குடிமக்களிடம் சென்று உங்கள் தேசத்திற்கு என்ன வேண்டும் எனக் கேட்டால் அவர்கள் அமைதி வேண்டும் என்றுதான் பதிலளிப்பார்கள்.

தான் நாம் மீண்டும் செய்து வருகிறோம். இப்போது சில விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள யாரும் அதை மறுக்க மாட்டீர்கள் என நம்புகிறேன். நாம் நேர்மையாக ஒப்புக் கொள்வோம். ஐ. நா. வின் நடைமுறையால், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவான ஐக்கிய நாடுகள் சபை தகர்ந்துவிட்டது. காலாவதியாகிவிட்டது. இது பயனற்றது. ஆண்டுக்கு ஒரு முறை இங்கு இப்படிக் கூடுவதும், சந்தித்துக் கொள்வதும், உரை நிகழ்த்துவதும் அறிக்கைகள் தயாரிப்பதும் நல்ல பேச்சைக் கேட்பதும் நல்லதுதான். ஆனால் இந்த சபை தனது எல்லா அதிகாரங்களையும் இழந்து வேடிக்கை பார்க்கும் இடமாக மாற்றப்பட்டு விட்டது. உலகின் ஆபத்தான சூழ்நிலையின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத சபையாகி விட்டது.

ஆதலால் வெனிசுவேலா மீண்டும் முன்மொழிகிறது. ஐக்கிய நாடுகள் சபையை மீட்டுருவாக்கம் செய்வோம்.

முதலாவது ஐ. நா. வின் விரிவாக்கம் பற்றியது. பாதுகாப்பு சபையின்

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தென்னிந்திய விடுதலைப் போரின் வீர மரபு
# ஹைதர் அலி முதல் பகத்சிங் வரை

காலனியாதிக்க எதிர்ப்புச் சிறப்பிதழ் நவம்பர் 2006 இச் சிறப்பிதழ் பிரித்தானியக் கொலனி ஆதிக்கத்திற்கெதிராக இந்திய மண்ணில் சிறப்பாகத் தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சிகளை மெச்சி அவை பற்றிய பயனுள்ள பலத கவல்களைத் தருகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தின் மீதான ஆங்கிலேய ஆதிக்கத்திற்கெதிரான முதலாவது எழுச்சியாக 1857 சிப்பாய்க் கலகமே கொண்டாடப்பட்டு வந்துள்ளது. மிகுந்த தயக்கத்துடனேயே இந்திய அதிகார பீடம் பிற எழுச்சிகட்கு அங்கீகாரத்தை வழங்கிய சூழலில் தமிழகம் கொலனிய ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஒரு முக்கியமான சக்தியாகத் திகழ்ந்திருக்கிறது என்பதை நினைவூட்டுவது தமிழ் மக்கள் இன்று ஏகாதிபத்திய எதிர்ப்பில் முனைப்பாகச் செயற்பட வேண்டிய தேவையையும் வற்புறுத்தி ஊக்குவிக்கிறது.

1800–1801இல் கிளர்ந்தெழுந்து 1806 வேலூர் சிப்பாய்கலவரத்தில் முடிந்த முதலாவது இந்திய சுதந்திரப் போரின் இரண்டு நூற்றாண்டு நினைவாக வந்துள்ள இந்த சஞ்சிகை பிரித்தானிய மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்திற்கு முன்னோடியாக ஹைதர் அலி 1767–69இல் தொடுத்த வெற்றிகரமான போரையும் எதிர் ஆங்கிலேயர் முறியடிக்கப்பட்டதையும் 1780–84 இல் நடத்து வெற்றிகரமான இரண்டவது போரையும் இரண்டாவது போரின் போது ஆட்சியுரிமை பெற்று 1790–92 இல் நடந்த மூன்றாவது போரிலும் போரின் தோல்வியின் பின்பும் 1799ல் சாகும் வரை உறுதியாக நின்ற ஹைதரின் மகன்திப்பு சுல்தானின் முற்போக்கான சிந்தனையையும் அவர்கள் பற்றிய கட்டுக்கதைகள் சிறப்பாக எடுத்துரைக்கின்றன.

தீர்பு சுல்தானுக்குத் துணைநின்ற திரன் சின்னமலை, கட்டபொம்மன், மருது சகோதரர்கள் ஊமைத்துரை, சிவத்தையா தூந்தஜிவாக்,




கோபால் நாயகர் போன்று தென்னிந்தியாவும் தமிழகமும் பெருமை கொண்டாடக்கூடிய வீரர்களைப் பற்றிய தலைவர்கள் பற்றிய விவரங்களுடன் ஆற்காடு நவாபு, தஞ்சை சரபோஜி மன்னன் தொண்டமான் போன்ற துரோகி களையும் கட்டுரைகள் அம்பலப் படுத்துகின்றன.

800 வீரமிக்க இந்தியச் சிப்பாய்களைப் பலி கொண்ட 1806 வேலூர் சிப்பாய்ப்புரட்சி பற்றிய விவரணம் தோல்வியில் முடிந்த அந்த எழுச்சியில் வரலாற்று முக்கியத்தை உணர்த்தி நிற்கிறது.

1857 வடஇந்திய சிப்பாய்க் கலவரத்தின் முக்கியத்துவத்தை எவ்வகையிலும் குறைப்பது தமது நோக்கமல்ல என்பதை வலியுறுத்துகிற விதமாக அந்த எழுச்சியின் வரலாற்றுப் பின்னணியை விவரித்து அக்கிளர்ச்சியை ஒரு சதியின் விளைவானது என அவமதிக்கும் வரலாற்றுப் பொய்யை மறுதலிக்கிறது.

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சியின் சிறப்பான பங்களிப்புக்கள் கொலனி ஆசிக்கத்திற்குச் சவலாகக் கப்பலோட்டியது மட்டுமல்ல என்பதையும் கூறி இந்தியாவின் விடுதலைப் போரின் கலங்கரை விளக்கமான பகத் சிங்கின் வீர வரலாற்றையும் தருகிறது. வேறு பலரதும் பங்களிப்புக்களையும் குறிப்பிடும் இச் சிறப்பிதழின் இறுதி அத்தியாயம் மிகப் பொருத்தமாக "மறு காலனியாதிக்கம்" என்ற தலைப்பில் உள்ள கட்டுரை விடுதலைப் போராட்ட வரலாற்றை இன்றைய நவகொலனியப் பின்னணியில் தொகுத்துக் கூறுகிறது.

மிகச் சிறப்பாக ஆராய்ந்து தொகுக்கப்பட்ட இந்தச் சிறப்பிதழ் பல வேறு விடுதலைப் போராளிகள் சுரண்டும் வர்க்கங்களைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களது வரலாற்றுப் பங்கைச் சரிவரக் கணித்து அதற்காக அவர்களைக் கவரவிப்பது மாக்ஸியவாதிகள் வரலாற்றை எவ்வாறு அணுக வேண்டும் என்பதற்கு ஒரு நல்ல வழிகாட்டல். அதே அணுகுமுறை பாரதி பற்றிக் காட்டப்படாமல் அவரது தவறுகளாக அடையாளக் காணப்படுகிறவற்றை மட்டும் வலியுறுத்தி அவரது காலச் சமூகச் சூழலில் அவரது பங்களிப்பின் பெறுமதியை மதிப்பிடத் தவறுவது மேற்படி சஞ்சிகையின் கட்டுரைகளிடையே காணப்படும் ஒரு குறைபாடாகும்.

புதிய கலாச்சாரம் வெளியிட்டுள்ள இக் கட்டுரைகள் இந்த நாட்டு மக்கள், குறிப்பாகத் தமது விடுதலைக்கு போராட வேண்டிய நிலையில் உள்ளவர்கள் கட்டாயம் படிக்க வேண் டியன. மறுகொலனியாதிக்க கொள்கைகளும் நடைமுறைகளும் ஏகாதிபத்தியவாதிகளால் திணிக்கப்பட்டு வரும் சூழலில் அவற்றை அடிமைத்தனமாக வரவேற்று நிற்கும் ஆளும் அதிகார வர்க்க சக்திகளின் மக்களுக்கு எதிரான துரோகத்தனங்கள் மத்தியில் மேற்படி கொலனிய எதிர்ப்புச் சிறப்பிதழ் பயன் தரும் முயற்சியாகும். இக் கட்டுரைகள் தினக்குரல் நாளிதழில் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மக்கள் தலைவன்

எங்கள் தாத்தன் ஊட்டிய
ஞானப்பாலுண்டு வளர்ந்தவன் நான்
அணுவளவேனும் அடிப்பிசகாது
அவர் வழியில் என் பயணம்...
வெட்டி வெட்டி
மக்கள் தம் சிந்தை சரிக்கும்
மகத்துவம் அவர் தந்த மதிநுட்பம்
நாளைகளில் கருக்கொள்ள காத்திருக்கும்
என் பரம்பரைக்கும்
இதை இழுத்துச் செல்லவே
எனதிந்த நாடகங்கள்

படித்தவன் விழித்துவிட்டால்
என் பசிக்கு எவர் இரையாவர்
ம்...... முண்டி முணகி நீ
எழத்துடிப்பினும்- உன்
முள்ளந்தண்டு முறிக்க
என் பைகளில்
பத்திரப்படுத்திய எலும்புத்துண்டுகள்
மிச்சமிருக்கின்றன.....
சிலதை தேர்தலில் வீசி எறிவேன்
மேலும் கொஞ்சத்தை
இளைஞர் தம் வாயடைக்க
அவன் வாசல் சென்று
வாக்குறுதி பூசி வீசுவேன்
அத்தனையும் செவியேற்று
கரம் தட்டி எமைக்குசி சேர்ப்பீர்....
உங்கள் வாக்குகள் வீணாகாதபடி
பேரம் பேசுவதையே
மீள மீள உரக்கச் சொல்லியபடி
ஊளைச் சதை பெருக்க
உண்டு களிப்பேன்

பித்த வெடிப்போடு
நித்தம் மலையேறுவதும்
அட்டைகளின் குருதிப் பசிக்கு
இரத்ததானம் செய்வதும்
கொளுத்தும் வெயில், கொட்டும் மழை
அனைத்து ரணங்களோடும்
மூச்சுத்திணறும் உம்மை
இன்னும் ஏறி மிதிப்பேன்
என் ராட்சதம் தெரியாதபடி
மயங்குவேன் மந்திரிப் பதவி வகிப்பேன்.

என் தொந்தி வயிறு
மேலும் புடைத்து கிளம்ப
ஐந்து நட்சத்திரங்களில்
என் சல்லாபம் அரங்கேறும்
எதிர்க் கட்சிகள் என(ம)க்கில்லை
ஆளுவோர் பக்கம் என்கரம் உயரும்
என் சிந்தையெங்கும்
மண்டி வளர்ந்த அட்டூழியம்
அம்பலமாகாதபடி மூடிக்கிடக்கும்.

பாட்டாளிகள்!
என்பார்வையில் ஏமாளிகளே!
உம்மை வெட்டி வெட்டிச் சாய்க்கும்
என் வீரத்துக்காய்
நாளையும் வாக்களித்து
நாடாளுமன்றம் அனுப்பிவையுங்கள்
நான் மக்கள் தொண்டன்.

காவத்தையூர் பா. மகேந்திரன்

**வெடி குண்டுகளால்**

**10 பக்க தொடர்ச்சி**

நிரந்தர மற்றும் தற்காலிக உறுப்பினராக வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு நிரந்தர இடம் அளித்து விரிவாக்க வேண்டும். இரண்டாவது உலக நாடுகளிடையே யான சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான வெளிப்படை யான நடைமுறைகள் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

மூன்றாவது ஜனநாயகத் தன்மையற்ற "வீட்டோ" உரிமையை இல்லாமல் செய்வது. பாதுகாப்பு சபையின் முடிவுகளில் கூட தலையிடும் இந்த வல்லமை படைத்த ஜனநாயக நாடு அதிகாரம் அழித்தொழிக்கப்பட வேண்டும். அண்மைய எடுத்துக்காட்டாக. பாதுகாப்பு சபையின் முடிவைத் தகர்த்த அமெரிக்க 'வீடடோ' அதிகாரம், பாலஸ்தீனத்தை அழிக்க இஸ்ரேலுக்கு உதவியது. நாம் எல்லோரும் கைகட்டி இதை வேடிக்கை பார்த்தோம். ஐ.நா. வில் தீர்மானம்கூட தடுக்கப்பட்டது.

நான்காவது ஐ.நா. வின் பொதுச் செயலாளரின் அதிகாரங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். நேற்று ஐ.நா. வின் பொதுச் செயலாளர் தனது பிரியாவிடை உரையை நிகழ்த்தினார். அதில் அவர் ஒப்புக் கொண்டார் கடந்த பத்து ஆண்டுகளில் நிலைமை படுமோசமாக மாறியுள்ளது. வறுமை, பசி, வன்முறை, மனித உரிமை மீறல் என எல்லாம் சீர்கெட்டுக் கிடக்கிறது. இதுதான் ஐ. நா. தகர்ந்ததற்கும், அமெரிக்க மேலாதிக்கத்திற்குமான இரத்த சாட்சியங்கள். இதைத் சொல்லத் தான் உறுப்பு நாடான வெனிசு வேலா ஐ. நா. வின் மீது கடந்த ஆண்டு விமர்சனத்தைத் தொடங்கியது.

எங்கள் குரலை எங்கள் ஆலோசனைகளை முன்வைத்தோம். எங்கள் குரல் சுதந்திரமானது. பக்கச் சார்பற்றது. இது இந்த சர்வதேச கட்டுமானத்தை மீட்டெடுத்து அமைதியை, தன்மானத்தை நிலை நாட்டுவதற்கான குரல், இப்படித் தான் வெனிசுவேலா தன்னை முன் வைத்தது. அமெரிக்க சர்வதிகாரம் உண்மையைக் கண்டு அஞ்சுகிறது. சுதந்திரக் குரல்களை கேட்கப் பயப்படுகிறது. எங்களை தீவிரவாதிகளென அழைக்கிறது. ஆனால் அவர்கள் தான் உண்மையான தீவிரவாதிகள்.

இவை எல்லாவற்றையும் மீறி நாம் நம்பிக்கையுடன் இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. யோசிப்பதற்கான மாற்று வழிகள் உருவாகி விட்டன. வித்தியாசமாக சிந்திக்கக் கூடிய இளம் தலைமுறை வந்து விட்டது. இவை எல்லாம் கடந்த பத்தாண்டுகளில் நிகழ்ந்துள்ளது. அது போலவே அமெரிக்கா மற்றும் நவதாராளவாத உலகம் பற்றிய பிம்பங்களும் சிதைந்து விட்டன. இந்த வழிமுறைகள் ஏழ்மையையே உற்பத்தி செய்பவை. இதை இனி யாரும் நம்பத் தயாராக இல்லை.

நாம் இனி புதிய உலகத்தை வரையறுக்கத் தொடங்கலாம். பொழுது புலரத் தொடங்கிவிட்டது. இதை நீங்கள் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும், ஐரோப்பாவிலும், இலத்தீன் அமெரிக்காவிலும் காணலாம். இந்த நம்பிக்கையளிக்கும் பார்வையை நான் வலியுறுத்த விரும்புகிறேன். நம்மை நாம் பலம் பொருந்தியவர்களாக உருமாற்ற வேண்டும். போராடுவதற்கான மனத்திடத்தை வளர்க்க வேண்டும். நாம் விழித்திருக்க வேண்டும். புதிய உலகை உருவாக்க வேண்டும்.

ஒரு புதிய படை புறப்பட்டுள்ளது. நாங்கள் தெற்கிலிருந்து வந்தவர்கள். இந்த அறிக்கைகளுடன் இந்த எண்ணங்களுடன், இந்த விமர்சனங்களுடன் எனது கோப்பை மூடுகிறேன்.

இந்த பூமியைக் காப்பாற்ற நமக்கு புதிய வழிகள் வேண்டும். பூமியை ஏகாதிபத்தியத்தின் கோரப்பிடியிலிருந்து காப்பாற்றியாக வேண்டும். இந்த நூற்றாண்டிலேயே அந்தக் காட்சியை, அந்தக் காலத்தை நாம் விரைவாக எட்டி விடுவோம். அந்தப் புதிய விடியல், நம் குழந்தைகளுக்கானது.

நம் பேரக் குழந்தைகள் ஐ. நா. வின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றி பெறப்பட்ட அமைதி தவழும் சூழலில் வாழ வேண்டும். அதற்கு புனரமைக்கப்பட்ட ஐ.நா. தேவை. அதற்கு ஐ.நா. இயங்குமிடத்தை மாற்ற வேண்டும். வேறு எங்காவது அதை மாற்றலாம். எங்காவது தெற்கில் அதற்கு நாங்கள் வெனிசுவேலாவை முன் மொழிகிறோம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 14 ஜனவரி 2007 பக்கம்12 விலை 15/- சுழற்சி 99

### நம்பிக்கையுடன் வழி நடப்போம்

சுனாமிப் பேரலையின் மறக்க முடியாத சோகங்களுடனும் யுத்தத்தின் பல முனைக் கொடூரங்களுடனும் தாங்க முடியாத வாழ்க்கை நெருக்கடிகளுடனும் 2007 புதுவருடத்தினுள் புகும் அனைத்து மக்களுடன் இணைந்து எதிர்காலம் மக்களுக்குரியதே என்ற நம்பிக்கையுடன் புதிய பூமி தனது பயணத்தைத் தொடர்கிறது.

ஆசிரியர் குழு

இணையத் தளம் : website: www.ndpsl.org.

# திருமலை-சம்பூரில் அனல் மின் நிலையம்

# இந்திய உதவியில் பேரினவாதத் திட்டம்

திருகோணமலையின் சம்பூரில 500 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அனல் மின் நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் இந்திய இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் கைச்சாத்திடப்படுகிறது. இந்தியாவினால் நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி அனல் மின் நிலையத்திற்கு 500 மில்லியன் அ. டொலர் செலவாகின்றது. மேற்படி அனல் மின் நிலையம் முன்பு திருகோணமலையின் வேறொரு பகுதியிலேயே அமைய இருந்தது. ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த சம்பூரை மூன்று மாதங்களுக்கு முன்பு ராணுவம் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. ராணுவம் புலிகளுடன் நடாத்திய யுத்தத்தால் சம்பூரில் வாழ்ந்து வந்த பதினோராயிரம் தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாயினர். அவ்வாறே முஸ்லீம் மக்களும் இடம் பெயர்ந்து ஏதிலிகளாயினர். மூதூர் சம்பூர் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் இன்னும் பெருமளவில் தமது சொந்த இடங்களுக்கு திரும்பவில்லை. ராணுவமே சம்பூர் முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறது.

இத்தகைய சூழலிலேயே அரசாங்கம் அவசர அவசரமாக சம்பூரில் அனல் மின் நிலையத்தை நிர்மாணிக்க இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்கிறது. இதற்காக சம்பூரின் 500 ஏக்கர் வளமான விவசாய நிலம் சுவீகரிக்கப்பட ஏற்பாடாகியுள்ளது. அவை அனைத்தும் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களாகும். இம் மின் நிலையத்தின் நிர்மாணம் 2010ம் ஆண்டிலேயே பூர்த்தி செய்யப்பட உள்ளது. இந்நிர்மான வேலைகளிலும் பின்பு அதன் இயக்கத்திலும் சிங்கள மக்களே வேலைக்கு அமர்த்தப்பட உள்ளனர். சிறு அளவில் முஸ்லீம்களுக்கு வேலை வழங்கினாலும் தமிழர்களுக்கு பாதுகாப்பு என்ற பெயரில் புலிமுத்திரை குத்தப்பட்டு வேலை மறுக்கப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே இவ் அனல் மின் நிலையத்தைச் சுற்றி திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறும். முன்னைய நடைமுறைகள் கிழக்கில் முன்னெடுக்கப்பட்டமை போன்றே தமிழ் மக்களின் எண்ணிக்கையும் வேலை வாய்ப்புகளும் இல்லாமல் செய்யப்படும். எனவே மகிந்த சிந்தனையை முன்னெடுக்கும் இன்றைய அரசாங்கம் மிகவும் திட்டமிட்ட வகையிலும் அடுத்தடுத்தும் பேரினவாத நடைமுறைகளை வேகமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஏற்கனவே மலையகத்தில் மேல் கொத்மலை நீர் மின் நிலையத்தை யப்பானிய உதவியுடன் அவர்களின் தேவை விருப்பத்திற்காக நிர்மாணித்து வருகின்றது. இதனால் அப் பிரதேசத்தின் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். அத்துடன் சூழல் பாதிப்புகளும் இடம் பெற ஆரம்பித்துள்ளன. இவற்றை முன் வைத்து மக்கள் நடாத்திய எதிர்ப்பு இயக்கங்களை அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லை. மலையக ஆதிக்க தொழிற்சங்க அரசியல் தலைமைகள் அரசிற்கு ஆதரவு தெரிவித்து தம சுய நலன்களைப் பாதுகாத்துக் கொண்டன.

அதே போன்று சீன உதவியுடன் புத்தளம் நுரைச்சோலையில் அனல் மின் நிலையம் நிர்மாணிக்கப்படுகின்றது. அங்கு தமிழ் சிங்கள முஸ்லீம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த போதும் அரசாங்கம் விடாப்பிடியாக அனல்மின் நிலையத்தை நிர்மாணித்து வருகின்றது. இதனால் விவசாய நிலங்கள் பாழடைவதுடன் மக் கள் பெரும் சூழல் மாசடைவதால் ஏற்படும் தாக்கங்களை பாதிப்புகளாக அனுபவிக்கப் போகின்றார்கள்.

மேல் கொத்மலை, நுரைச்சோலை, சம்பூர் மின் நிலையங்களின் நிர்மாணத்தை உற்று நோக்கினால் அவற்றுக்குப் பின்னால் பேரினவாத இன அழிப்பு நோக்கங்கள் திட்டமிட்டவகையில் அமைந்திருப்பதை அவதானிக்க முடியும்.

அவற்றுடன் அந்நிய சக்திகளின் முதலீடுகளும் அவற்றின் மூலம் மக்கள் சுரண்டப்பட்டு ஆதிக்கம் செலுத்தப்படும் அபாயங்களும் நிறைந்து காணப்படுகின்றன. யுத்தத்தின் பேரிலும் அதன் நிழலிலும் அந்நிய மூலதனத் திட்டங்கள் நிறை வேற்றப்படுகின்றன என்பதற்கு சம்பூரின் அனல் மின் நிலையமும் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டு வரும் மேல் கொத்மலை நுரைச்சோலை மின் நிலையங்களும் உதாரணங்களாகும். பேரினவாத ஆளும் வர்க்கமும் அதன் எசமானர்களான அந்நிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளும் ஒரே கல்லில் பல மாங்காய்கள் வீழ்த்தும் செயல்களையே நடைமுறையாக்கி வருகின்றன. சகல தரப்பு மக்களும் விழிப்புறுவதைத் தவிர வேறு வழிஇல்லை.

### வடக்கு கிழக்கு பிரிப்பு

1ம் பக்க தொடர்ச்சி

தமிழ் முஸ்லீம் ஐக்கியம் ஆகிய மூன்றையும் இல்லாதொழிப்பதே இன்றைய வடக்கு கிழக்குப் பிரிப்பின் அடிப்படைத் திட்டமாகும். யாழ்ப்பாணத்தையும் மட்டக்களப்பையும் நிர்வாகத் தலைமை இடமாக இருக்க விடக் கூடாது என்ற பேரினவாத வெறித்தனத்தையும் வெளிக்காட்டியுள்ளனர். இதன் மூலம் கிழக்கின் முஸ்லீம் தலைமைகளைத் தம் பக்கம் வைத்து தமிழ் முஸ்லீம் மோதலை நிரந்தரமாக்கி என்னென்றும் பேரினவாதத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் பலம் சேர்க்கலாம் என்றே நம்புகின்றனர்.

மேலும் திருகோணமலையின் துறைமுகத்தையும் ஏனைய வளங்களையும் மையப்படுத்தி சுற்றியுள்ள பிரதேசங்களில் வாழும் தமிழ் முஸ்லீம் மக்களை அந்நியப்படுத்தி முற்றிலும் சிங்கள மேலாதிக்க மயக்கப்பட்ட ஒரு நகரமாக வைத்திருக்கவே அங்கு தனி நிர்வாகம் உருவாக்கப்படுகின்றது. இதனை இந்தியாவின் ஒப்புதலுடனும் உதவியுடனும் செய்வதில் அரசாங்கம் மிக அவதானத்துடன் செயலாற்றி வருகின்றது. இவ்வாறான வடக்கு கிழக்கு பிரிப்பும் தனித்தனி நிர்வாக அமைப்புகளும் தமிழ் முஸ்லீம் தேசிய இனங்களின் தனித்துவங்களையும் அவற்றின் அடிப்படையிலான கோரிக்கைகளையும் இன மத மொழி நிலைப்பாடுகளின் ஊடாக இல்லாது ஒழிக்கும் பாரிய திட்டமும் நடவடிக்கையுமேயாகும்.

இதனை சகல தமிழ் முஸ்லீம் மக்களும் உறுதியாக எதிர்ப்பது அவசியமாகும். சிலருக்கு அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கை நியாயம் போலவும் நிர்வாக அபிவிருத்தி வசதிக்கானவை போன்றதாகவும் தென்படும். ஆனால் இதன் அபாயம் முன்னைய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் இன்று வரையான எதிர்மறை விளைவுகள் போன்றவையேயாகும். எதிர்காலத்தில் மேலும் கிக்கல்கள் பிரச்சினைகள் மோதல்கள் எதிர்ப்புகள் போராட்டங்கள் என்பனவற்றை வளரச் செய்வதற்கே இப் பிரிப்பு நடவடிக்கை வழிகோலப்போகின்றது. இதனால் வடக்கு கிழக்கு மட்டுமன்றி முழு நாடும் மேன் மேலும் நாசங்களையும் அழிவுகளையுமே சந்திக்கப் போகின்ற சூழலிலே தொடரும்.

### இந்தியா இரட்டை

1ம் பக்க தொடர்ச்சி...

போதிலும் மனதார அதை விரும்பவில்லை. மோதல்கள் வெடிப்பதையும் யுத்த நிறுத்த மீறல்கள் ஏற்படுவதையும் பேச்சுவார்த்தை தடம் புரள்வதையும் இந்திய ஆளும் வர்க்கமும் அதன்றோ (RAW) வும் பல்வேறு வழிமுறைகளில் ஊக்கப்படுத்தி வந்தன. இதற்காக தீவிர சிங்கள பௌத்த இனவாதிகளையும் தமிழ் முஸ்லீம் குறுந்தேசியவாதிகளையும் உசிப்பி விட்டு வந்தது என்று கூறப்பட்டு வந்த குற்றச்சாட்டு நிராகரிக்கப்படக் கூடிய ஒன்றல்ல.

இப்பொழுது அரசாங்க- புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தம் முற்றாகச் செயலிழந்து பேச்சுவார்த்தை மேசை வெறுமையாக்கப்பட்டுள்ளது. நோர்வே அனுசரணையானது தனது இயலாமையை டில்லிக்கு தெரியப்படுத்தியுள்ளமையை உள்ளார்ந்த திருப்தியோடு இந்தியா தலையாட்டி ஏற்றுக் கொண்டுள்ளது. இத்தகைய ஒரு நிலையைத் தான் இந்தியா எதிர்பார்த்திருந்தது. இலங்கையில் சம்மந்தப் பட்ட தரப்பினரை நீளக் கயிற்றில் விட்டுப்பார்த்தது ஆனால் அடிக்கயிற்றின் கட்டைத் தனது கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தது. இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் தத்தமது நிலைகளில் இருந்து கொண்டு அமெரிக்க மேற்குலக யப்பான் உள்ளிட்ட "சர்வதேச சமூகம்" என்பதன் ஊடாகத் தங்கள் இலக்குகளு க்கு வலுச்சேர்க்கவே முயன்றன. ஆனால் அது முழுமையாக நிறைவேறவில்லை. இருப்பினும் இலங்கை அரசாங்கம் ஓரளவிற்கு உள்ளார்ந்த இலாபங் களை அடைந்து கொண்டது. அமெரிக்காவின் ராணுவ உதவிகளைப் பெறுவதில் முன்னேற்றம் கண்டது. அந்த நம்பிக்கையிலேயே ராணுவத் தீர்வை நோக்கி நகர்ந்தும் வருகின்றது.

இந் நிலையிலேயே இந்தியா இப்பொழுது காய்களைப் புதிய வகையில் நகர்த்த ஆரம்பித்துள்ளது. இலங்கை அரசாங்கமும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்தியாவின் சொற்படி இனப்பிரச்சினையில் நடந்து கொள்ளத் தயாரில்லாத சூழலில் சற்று தூரத்தே வைத்து பாடம் புகட்டவே இந்தியா விரும்பி நிற்கிறது. சுனாமிக்கட்டமைப்பு நீதி மன்றத்தீர்ப்பால் முடக்கப்பட்டதை உள்ளூர விரும்பிய இந்தியா அதே நீதிமன்றம் வடக்கு கிழக்கின் இணைப்பை சட்ட விரோதமானது என்று தீர்ப்பு வழங்கியதை உள்வாங்கிக் கொள்ள இயலவில்லை. காரணம் அத்தீர்ப்பு இந்தியாவின் சட்டையில் சேறு வீசிக் கொண்டமை போன்றதாகும். மேலும் இந்தியாவின் ஆசீர்வாதம் இன்றி அமெரிக்க வழிகாட்டலில் ராணுவ நடவடிக்கைகளை மகிந்த அரசாங்கம் முன்னெடுப்பதும் இந்தியாவைச் சினமுறச் செய்துள்ளது.

இந்நிலையிலேயே இரண்டு மாதங்களுக்கு முன்பு சென்னையில் கருணாநிதியும் டில்லியில் மன்மோகன் சிங்கும் சந்திக்க மறுத்த தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவ் இரு இடங்களிலும் அவர்களுக்கு நல்ல வரவேற்பும் உபசரனைகளும் கிடைத்துள்ளன. பதிலுக்கு கூட்டமைப்பினர் பொன்னாடைகள் போர்த்தி கட்டித்தழுவி போற்றிப் புகழ்ந்து திரும்பியுள்ளனர். இத் தூதுக்குழுவில் சென்றவர்களில் ஒருவரைத் தவிர ஏனையோர் இந்திய ஆளும் வர்க்கத்திற்கும் றோவினருக்கும் புதியவர்கள் அல்லர். அவர்கள் முழுமையான இந்திய ஆளும் வர்க்க விசுவாசிகளும் அவர்களால் போசிக்கப்பட்டவர்களுமாவர். இந்தியா இவர்களுக்கு அழைப்பு விடுத்த போது மிகக் கவனமாகத் தேர்ந்தெடுத்தவர்களையே அழைத்திருக்கிறது. அப்படி இருந்தும் காங்கிரஸ் தலைவி திருமதி சோனியா காந்தி இத்தூதுக் குழுவினரைச் சந்திக்கவில்லை என்பது தற்செயலான ஒன்றல்ல.

இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பினரை வரவழைத்து கௌரவம் கொடுத்து இங்குள்ள நிலவரங்களைக் கேட்டு அறிந்து கொண்டுள்ளதாகக் காட்டிக் கொண்டதன் மூலம் ஒரு கனதியான செய்தியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கிடைக்கச் செய்வதில் இந்தியா தனது காயை நகர்த்தியுள்ளது. இது பிராந்திய மேலாதிக்க நலன் சார்ந்த காய் நகர்த்தலே அன்றி ஈழத்தமிழர்களுக்கு அபயமளிக்கும் ஒன்றல்ல. நம் நாட்டு தமிழ் ஊடகங்கள் இதை ஊதிப் பெருப்பித்துக் கொள்கின்றன. இரண்டு மாதங்களுக்கு முன்பு தமிழக முதல்வர் கருணாநிதியையும் பிரதமர் மன்மோகன் சிங்கையும் நொந்து சினந்து எழுதியவர்கள் இப்போது புகழ்ந்து வரவேற்று ஈழத்தமிழர்களை ரட்சிக்கப் போகிறார்கள் என்ற தொனியில் கருத்துரைக்கின்றமை சிரிப்பை வரவழைக்கின்றது.

இதே ஊடகத்தினர் ஈழத்தமிழருக்கு சார்பில்லாதவர்கள் என பாதுகாப்பு ஆலோசகர் கே. ஆர். நாராயணன் வெளியுறவுச் செயலர் சிவசங்கர் மேனன் ஆகியோரைச் சுட்டிக்காட்டி எழுதினார்கள். ஆனால் கூட்டமைப்பினருடனான பேச்சுவார்த்தையில் அவ் இருவருமே பிரதமரின் இருபக்கமும் இருந்து ஆலோசனை வழங்கினர் என்பதை இலகுவில் மறந்துவிட முடியாது. அத்துடன் சமகாலத்தில் சென்னையில் வெளிவிவகா அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறிய கருத்துக்கள் சிந்தனை க்குரியதாகும். இலங்கையின் இறமை ஆட்புல ஒருமைப்பாடு சுயாதிபத்தியத்தை இந்தியா மதித்து செயற்படும் எனவும் இராணுவ பயிற்சி, ஆயுத விற்பனை வழமையானது என்றும் நேரடித் தலையீடு இல்லை என்றும் கூறியுள்ளார். ஆனால் அரசியல் தீர்வை வற்புறுத்துவதாகவும் தெரிவித்தார் அமைச்சர் பிரணாப்முக்ர்ஜி..

எனவே மீண்டும் இந்தியா இலங்கை இனப்பிரச்சினையில் களம் இறங்குமேயானால் வழமையான இரட்டை வேடத்துடன் செயலாற்றக் கூடாது. முன்னைய நிலைப்பாடான. "குரங்கு அப்பம் பங்கிட்ட" குரங்கு பூனைகள் கதையாகி விடக் கூடாது. இலங்கையில் தனது பொருளாதார அரசியல் ராணுவ நலன்களை உறுதிப்படுத்தி விஸ்தரிக்கும் உள் நோக்கத்துடன் இந்தியா செயலாற்றுமாயின் ஈழத் தமிழருக்கு மேலும் நாசங்கள் வரவே செய்யும். வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் பாரம்பரிய பிரதேசத்தில் ஐக்கியப்பட்ட இலங்கையில் சுயாட்சி மூலமான அரசியல் தீர்வைப் பெறுவதில் இந்தியா தனது அழுத்தத்தை இலங்கையின் பேரினவாத ஆளும் வர்க்கத்திற்கு கொடுக்குமாயின் அதுவே ஈழத்தமிழருக்கு உதவக் கூடியதாகும். புலிகளை ஓரங்கட்டி அழித்து ஒழிப்பதற்கோ அல்லது பெயரளவிலான தீர்வைக்காட்டி தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கோ இந்தியா முற்படுமானால் அத்தகைய முயற்சி மேலும் பிரச்சினைகளை பல மடங்கு சிக்கலாக்குவதாகவும் ஒடுக்குமுறைக்கு உதவுவதாகவுமே அமையக் கூடியதாகும்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.